Registered No. M. 878

257
XX.A

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானச் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்,

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை

தொகுதி 2. } 1911௵ மே௴ 15௳ / விரோதிகிருது௵ வைகாசி௴ 2௳ { பகுதி 1.

ப. நாராயண் அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. | தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| பூர்ணசந்திரோதயம் இரண்டாம் வருஷம்—பு. நா. | ௧ |
| பகவத்கீதை—ப. நா. | ௨ |
| உதயசூரிய சங்கம். | ௮ |
| யோகம்—ம. வேதநாயக தாஸ: | ௧௦ |
| சுமதி என்னும் உத்தமியின்சரித்திரம்—எஸ். சாமிநாத அய்யர். | ௧௩ |
| மதங்களுக்குள் சகோதர தர்மம்நிகழவேண்டுமென்பது—ப.நா. | ௧௮ |
| பிரஹ்மஞான சபையும் சகோதரபாவமும்—ப. நா. | ௨௬ |
| சங்கீதம்—பி. எஸ். சுப்பிரமணிய அய்யர். | ௩௧ |
| புத்தக வரவு—பத்திராதிபர். | ௩௩ |
| சமாசாரம்—பத்திராதிபர். | ௩௬ |
| பதஞ்சலி மஹரிஷி அருளிச் செய்த யோக சூத்திரம். | |



# The
# Oriental Prognostic Observatory.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M.F. (PARIS): ETC.

Charges very moderate for the work turned out!

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN LEO-writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST.,
Chulai, Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதாரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

## இரண்டாந்தொகுதி.

1911௵ மே௴ 15௳ முதல் 1912௵ ஏப்பிரல்௴ 15௳ வரை
12 சஞ்சிகைகள் கொண்டது.


ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமிஐயர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்.


வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அண 4.


மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## [illegible]


விஷயம். — பக்கம்.

அதிகசமீபத்தில் வருங்காலவிசேஷம்.--வி. இராமசந்திரநாயுடு. ௧௦௩

அங்நிபெஸண்டு அம்மையார், நமது தலைவர், அவர் படம். — ப. நாராயண ஐயர். ௧௯௩

அங்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம். — P. R. கிருஷ்ணமாசாரியர். ௨௦௩

அயநம்.—ஆர். எஸ். நாராயணசாமி ஐயர். ... ௩௮௨, ௪௦௧

ஆகாசக்கப்பல்களுக்கும் புகைக் கூண்டுகளுக்கும் விபத்து. — ப. நாராயண ஐயர். ௨௫௩

இரதோத்ஸவம், அதன் உண்மை.—வி. இராமசந்திர நாயுடு. ௧௪௦

இஷ்டம், பூர்த்தம், தாநம்.—பி. எஸ். ஸுப்ரஹ்மண்யஐயர். ௪௦௬

உகய சூரிய சங்கம். ... ... ... ௮

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு.—சிவராமன். ௩௫௦

எண்ணம்: அதன் பயன், நன்மை, தீமை.--வி.வெங்குசாமிஐயர். ௮௮

ஓய்வுநேரத்தை ஒழுங்காய்க் கழிக்கும் முறை.—சி. வ. ௨௫௬

கல்விகற்பிக்கும் முறையின் சீர்திருத்தம்—ப. நாராயண ஐயர். ௭௯

கர்மம்.—ஒரு நண்பர். ... ... ... ௧௩௦

காயத்ரீ.—ப. நாராயண ஐயர். .... ... ... ௧௨௧

காயத்ரீ ராமாயணம்.—பி. எஸ். சுப்பிரமணிய ஐயர். ௩௦௫, ௩௪௩

காலஞ்சென்ற நாந்தங்கிய வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள். — பத்திராதிபர். ௩௧௭

காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் சரித்திரச் சுருக்கம். — P. R. கிருஷ்ணமாசாரியர். ௩௨௨

சங்கீதம்.—பி. எஸ். சுப்பிரமணியஐயர். ௩௧, ௬௧, ௧௪௭

சன்மார்க்கசபையை நடத்தும் முறை.—ப. நாராயணையர். ௩௯௫

சமாசாரம்:—

அமெரிக்காதேசத்தில் ஹிந்து ஸங்கீதம். ... ௭௨

அரிசி. ... ... ௧௧௮

அமெரிக்காதேசத்துக் குபேரர் ஒருவரான ஆஷ்ட் நகார்னிகி என்பார். ... ௨௧௫

அடையார் தியாஸபிஸ்டு ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமான்.வாடியா அவர்கள் மதுரையில் பிரஸங்கம் செய்தது. ௩௮௫

| விஷயம். | பக்கம். |
|---|---|
| **சமாசாரம்:—** | |
| அந்நிபெஸண்டு அம்மையாரைப்பற்றி ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலெழுதியிருப்பது. ... | ௩௯௪ |
| 1911ஷு த்தின் ஜநக்கணக்கு விஷயம். ... | ௩௬௦ |
| இங்கிலாண்டில் யார்க்ஷைரவாவியான தோமஸ்வில்லியம் பர்ஜஸ் என்பவர் கலே வாய்க்காலை நீந்தித்தாண்டல். | ௩௨௮ |
| இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ரெயில்வே. ... | ௪௨௫ |
| ஒருதுக்ககரமானகொலை (ஸ்ரீமான். ஆஷ் என்பவரின் கொலை). | ௧௧௧ |
| கம்போடியா பருத்தி. ... ... ... | ௩௬ |
| கப்பல்களின் சமாசாரப்பத்திரிகை. ... ... | ௩௨௮ |
| ஸ்ரீகாளஹஸ்தியில் கும்பாபிஷேகம். ... ... | ௪௨௬ |
| கும்பகோணம் பிரஹ்மவித்யா மடாலயம். ... ... | ௩௯௩ |
| கொப்புரைத்தேங்காய். ... ... ... | ௧௧௧ |
| கோஹிநூரின் வரலாறு. ... ... ... | ௧௪௬ |
| ஸ்ரீ சங்கர ஜயந்தி திநம். ... ... ... | ௩௬ |
| சீனதேசத்தில் பிரஜாதிபத்யம். ... ... | ௪௨௫ |
| "சுவர்ணமணிமாலை" என்ற சங்கம். ... ... | ௨௬௩ |
| சூரிய கிரணங்களால் ஜலமிறைத்தல். ... ... | ௨௯௪ |
| தக்ஷிண துருவம் கண்டுபிடித்தல். ... ... | ௪௨௫ |
| ஸ்ரீமான். எம். தில்லைநாயகம்பிள்ளை, B. A., F. T. S., அவர்களின் மரணம். ... | ௧௨௰ |
| ஸ்ரீமான். தோமஸ் பிராம் என்பாரின் உபந்நியாஸங்கள் (மதுரை பிரஹ்மஞாந மந்திரத்தில்). ... | ௩௬௦ |
| நான்குலக்ஷம் வருஷத்திற்கு முன்னம் இருந்த சமுத்திர ஆமையின் சிலாபாவம். ... ... | ௧௯௨ |
| நிலத்தின் வலிமையையும் வளமையையும் விருத்திபண்ணும் முறை. ... ... | ௨௯௫ |
| ராவ்பகதூர் நோரேந்திரநாத்ஸேன் என்பவரின்மரணம். | ௧௧௯ |
| பக்ஷிகள் ஆட்டிடையர்களின் தொழில் செய்தல். ... | ௭௧ |
| பழைய கவர்னர் போதல், புது கவர்னர் வருதல். ... | ௨௬௪ |
| ஸ்ரீமான். பாண்டித்துரைத் தேவரவர்களின் மரணம். .. | ௨௯௩ |
| பிரஹ்மஞாந கிளைச்சங்கங்களின் மஹாசபை:— | |
| (1) இராமநாதபுரம். ... ... | ௧௫௩ |
| (2) உக்கடை. ... ... | ௨௩௨ |
| (3) கூடலூர். ... ... | ௩௭ |
| (4) சாத்தூர். ... ... | ௩௮௭ |
| (5) சீகாழி. ... ... | ௩௫௮ |

# உள்ளுறை.




| விஷயம். | பக்கம் |
|---|---|
| பிராஹ்மணார்த கிளைச்சங்கங்களின் மஹாசபை:— | |
| (6) திருவண்ணாமலை. ... ... | கடுச |
| (7) பரமக்குடி. ... ... | உருக |
| (8) வேதாரண்யம். ... ... | எக |
| பிராணிகளின் வயதுக்கிரமம். ... ... | எக |
| மதுரை, பிராஹ்மணார்த மந்திரத்தில் யாழ்ப்பாணம்ஸ்ரீமான் இராமநாதன் அவர்கள் செய்த உபந்நியாஸம். ... | கடுடு |
| மதுரை ஸ்ரீ மீனாக்ஷீ வித்யாசாலையின் 6-வது வருஷத்திய விசேஷ உத்ஸவம். ... | கடுடு |
| மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களின் நன்கொடை. ... | உகச |
| மீன்களுக்கு வைத்தியசாலை. ... ... | ருஎ |
| கே. எம். ராமசாமி ஐயர் B. A., என்பாரின் மரணம். ... | உகரு |
| விக்டோரியா எட்வார்டு ஸரஸ்வதீ விலாஸம். ... | உகச |
| வெண்தாமரை நாள். ... ... | ச0 |
| ஜீவஹிம்ஸை நிவாரண சங்கம். ... ... | ருஉஅ |
| ஸ்திரீகளின் கூட்டம். ... ... | சஉச |
| ஹிந்து ஸர்வகலாசாலை. ... ... | உகச |
| ஸ்ரீ சிருங்ககிரிமடத்துஸ்வாமிகளின் விதேக முக்தி. ப. நாராயணையர். | சஉக |
| சிக் மடங்கள்.—ஆர். ஏ. சாஸ்திரி. ... ... | உஎஎ |
| சீனதேசத்தைப்பற்றிய சிலவிஷயங்கள்.—ஆத்மநாதன். | ருடுரு |
| சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம். எஸ். சாமிநாதையர். | கரு, கஎரு, உடுஎ, ருகரு, சகஎ |
| சுப்பிரமணியரும் அவருடைய உண்மையும். சிவராமசுப்பிரமணியன். | கடுஎ |
| டில்லிமாநகரில் மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம். பத்திராதிபர். | உகடு |
| துறவு.—மு. வேங்கடஸாமிநாட்டார். | உசஅ |
| தென்னை பனைமரத்து வண்டுகள்.—வி. ஏ. பார்பர். | கடுக |
| நோயற்றவாழ்வையடையும் முறை.—சுப்பிரமணியன். | ருடுடு |
| பகவத்கீதை.—ப. நாராயண ஐயர். | உ |
| பத்திரிகைவரவு:— | |
| அமிர்தவசனி. ... ... | ஏம |
| சநாதநதர்மம். ... ... | எம |
| தமிழ். ... ... | ருடுஎ |

| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| **பத்திரிகைவரவு:—** | | |
| நாடகாபிமாநி. | | ௨௩0 |
| நெட்டால் நாட்டிற்குக் கூலிகளாகச் செல்ல விரும்பும் இந்தியர்களுக்கு ஓர் எச்சரிக்கை. | | ௩௩ |
| வைசியமித்திரன். | | ௧௪௫ |
| பரமாநந்தோதய சாதநம்.—கோ. வடிவேலுசெட்டியார். | | ௫௭ |
| பாஸு என்பாரின் விவாகவிஷயமான மசோதாச்சட்டம். | ஆத்மநாதன். | ௧௩௫ |
| பிரஹ்மஞானசபையும் சகோதரபாவமும். | ப. நாராயண ஐயர். | ௨௬, ௬௫, ௯௧ |
| பிரஹ்மஞானசபை வெள்ளியம்பலத்தின் ஞாந தூதாகும். | ப. நாராயண ஐயர் | ௩௬௧ |
| புதிய ஸர்வகலாசாலைகளை ஸ்தாபிக்கும் முறையில் பிரயத்தநங்கள். | ப. நாராயண ஐயர். | ௭௩ |
| புறுக்களின் மூலமாய் போட்டகிறுப் எடுத்தல். | ப. நாராயண ஐயர். | ௨௫௪ |
| **புத்தகவரவு:—** | | |
| அக்ஞாதவாஸம் அல்லது மாண்டவன் மீண்டமாயம். | | ௧௧௭ |
| ஆரியமத உபாக்யாநம். | | ௩௬ |
| ஆரியருடைய ஸங்கீத சாஸ்திரத்தின் சரித்திர சங்கிரஹம். | | ௬௧ |
| இயற்கை அற்புதங்கள். | | ௩௫ |
| இயேசு கிறீஸ்து என்பவர்களின் சரிதம் அதன் உண்மை. | | ௩௩ |
| இயேசுகிறீஸ்துஎன்பார்ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். | | ௧௧௮ |
| கண்ணகிகதை. | | ௧௪௫ |
| கலைசைச் சிலேடை வெண்பா | | ௩௫௬ |
| கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து. | | ௪௨௩ |
| கிள்ளை விடுதூது. | | ௧௪௫ |
| கோமதி கோகிலமானது. | | ௩௮௫ |
| சன்மார்க்கம். | | ௩௫௭ |
| சுதேசவைத்திய ரத்நிகம். | | ௩௫௬ |
| தமிழ் வியாசங்கள். | | ௧௪௫ |
| திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு. | | ௧௯௧ |
| திருச்சுழியல் வெண்பா அந்தாதி. | | ௪௨௩ |
| நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம். | | ௯௫௭ |
| பதரிவநக்கும்மி. | | ௨௩0 |
| பாண்டியம். | | ௩௪ |

# உள்ளுறை.


| விஷயம். | | பக்கம். |
|---|---|---|
| புத்தகவரவு:— | | |
| பார்வதீயம் என்னும் பாலிகாபூஷணம். ... ... | | ஙஙசு |
| ஸ்ரீவான்மீகி ராமாயணச் சருக்கார்த்த சங்கிரகம். ... | | ககஎ |
| விநாயகர்பதிகம். ... ... ... | | ஙங |
| விரோதிகிருதுஹூத்திய விவசாய பஞ்சாங்கம். ... | | ஙங |
| ஸமனஸன் நாடகம். ... ... ... | | உகூச |
| பூர்ணசந்திரோதயம் இரண்டாம் வருஷம்—பத்திராதிபர். | | க |
| மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழவேண்டுமென்பது. | ப. நாராயண ஐயர். | கஅ, சகூ |
| மகுடாபிஷேகம்.—பத்திராதிபர். ... ... | | எஎ |
| மனிதர்கடமை.—து. வி. கோபாலசாமி நாயக்கர். | | கசுசு |
| மநுஷ்யயத்நமும் ஈசுவரகிருபையும்—ரா. இராகவையங்கார். | | உசசு |
| மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார், நமது தலைவர், அவர்படம். | ப. நாராயணஐயர். | ககூங |
| மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ்மன்னர் பட்டாபிஷேகமும் டில்லிதர்பாரும்.—பி. எஸ். சுப்பிரமணிய ஐயர். | | உசுஅ |
| முத்துக்களை ஆக்கி வளர்க்கும் முறை.—ப. நாராயண ஐயர். | | உருரு |
| முடிசூட்டுவாழ்த்து—எஸ். சாமிநாதையர். ... | | உஎங |
| மோனம் என்பது ஞாநவரம்பு.—ப. நாராயண ஐயர். | | சக |
| மோக்ஷம் அல்லது வீடுபெறல்.—ப. நாராயண ஐயர். | | உஙங |
| யோகம்.—ம. வேதநாயகதாஸ: | | க௦ |
| ஸ்ரீமான். பி. எஸ். ராஜகோபாலையர், B. A., B. L., F. T. S., அவர்களின் மரணம்.—பத்திராதிபர். | | ஙஉக |
| வண்டு மாங்கனி.—ப. நாராயண ஐயர். ... | | கசச |
| விபூதிதாரணமுறை.—சி. நாராயணஸ்வாமி ஐயர். ... | | ருரு |
| விஷ்ணுதிநம்.—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர். | | கஅஎ |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரியபுருஷர்களும். | ப.நாராயணையர். | கஎஅ, உகரு |
| ஸந்மார்க்கமுறையும் ஸம்ஸாரியும். | ப. நாராயண ஐயர், | உகூ0, உகூஎ, ஙசுஅ |
| ஸர்வகலாசாலை வித்யார்த்திகளுக்கு நற்போதனை. | ப. நாராயண ஐயர். | ஙஉகூ |
| ஹிந்து என்பவன் எவன்?—ப. நாராயண ஐயர். ... | | உஅ0 |


பத்திராதிபர்.

# பூர்ணசந்திரோதயம்.

## அறிவிப்பு.

---

இந்த மாஸத்தின் பத்திரிகையோடு இப்பத்திரிகைக்கு இரண்டாம் ஆண்டு நிறைவாகிறது. வருகிற மேமீ 15௳யில் மூன்றாம் ஆண்டு ஆரம்பமாகிறது. முதலில், பத்திரிகையை 32 பக்கங்களடங்கியதாக வெளிப்படுத்த உத்தேசித்தோம். அதன் பிரகாரம் 12×32=384 பக்கங்கள் தான் முதற்றொகுதிக்கு ஏற்படவேண்டியது. ஆனால் மேற்கொண்டு 30 பக்கம் அதிகமாக (அதாவது 414 பக்கங்களை)ச் சந்தாதார்களுக்கு அளித்தோம்.

இரண்டாம் வருஷத்தில், ஒவ்வொரு மாதமும் 40 பக்கத்திற்குக் குறையாமல் பத்திரிகையை வெளிப்படுத்துவதாக உத்தேசித்து, அதன் பிரகாரமே 40×12=480 பக்கங்களும், மேற்கொண்டு 27 பக்கங்களும் ஆக 507 பக்கங்கள் (உள்ளுறை 5 பக்கங்களைச் சேர்த்து) உள்ளதாக இரண்டாம் தொகுதியை வெளிப்படுத்தியிருக்கிறோம். சந்தாவையும் கொஞ்சமேனும் அதிகப்படுத்தாமல் முதல் ஆண்டிற்போலவே இரண்டாம் ஆண்டிலும் ரூ 2 விகிதம் தான் சந்தாதார்களிடமிருந்து வசூலிக்கப்பெற்றது. அருமையான யோகசூத்திரம் மொழிபெயர்ப்பு குறிப்புரைகளுடன் இவ்விரண்டாம் வருஷத்தில் வெளியிட்டிருக்கிறோம்.

வருகிற மூன்றாம் வருஷத்திலும் ஒவ்வொருமாதமும் 40 பக்கத்திற்குக் குறையாமல் பத்திரிகையை வெளிப்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறோம். யோகசூத்திரம் இவ்வருஷத்தில் முடியும். முன்னரைவிட இவ்வருஷத்தில் இன்னும் அதிக உயர்வான வியாஸங்கள் வெளிவரும். அவ்வுத்தேசம் திருப்தியாக நிறைவேறும் வண்ணம் சந்தாதார்கள் முன்பணம் அனுப்புவதுடன் தம்மால் இயன்றவரை, ஒவ்வொருவரும் ஓர் ஓர் புதிய சந்தாதாரைச் சேர்ப்பிக்கும் பக்ஷத்தில் பத்திரிகை இன்னும் அதிக நலம்பெறும்படியாக நடத்த முயற்சிப்போம். அடுத்த பத்திரிகை, முன்னனுப்பிய சந்தாப்பணம் பாக்கி இல்லாதவர்களுக்கு வி. பி. பி. மூலம் அனுப்பப்

படும். ரூ 2-1-0 கொடுத்து அதை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமெனப் பிரார்த்தனை. ஏனையருக்கு அவர்கள் செலுத்தியிருக்கிற சந்தாப்பணம் தீரும் வரையில் பத்திரிகைகள் அனுப்பப்படும். பின்பு வி. பி. பி. யில் அடுத்த பத்திரிகை அனுப்பப்படும். பத்திரிகையை இனி அனுப்பவேண்டா மென்கிறவர்கள் அப்படித் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காமற் போனால் பத்திரிகைகள் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.

இப்பத்திரிகை இன்னும் அதிகமாகப் பரவும்படி நம் ஜநங்கள் உதவி புரிவரர்கள் என்று பிரார்த்திக்கிறோம்.

ப. நாராயணன்.

பத்திராதிபர், பூர்ணசந்திரோதயம், மதுரை.

---

## ஒரு விக்ஞாபநம்.

ஆங்கிலத்தில் அருமையான ஞாந விஷயங்கள் பிரஹ்மஞாந சபையாரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் தெரியாத தமிழர்களும் அவைகளை அறிந்து பயன்பெறும்படி வெண்தாமரை இதழ் என்ற பெயருள்ள மாலிகையாக ஞாநநூல்கள் தமிழில் பிரசுரம் செய்வதாக உத்தேசித்து இப்போது மௌநவாக்கு, சந்மார்க்க தீபம் என்ற இரண்டு சிறுபுத்தகங்கள் வெளியிடப் பெற்றிருக்கின்றன. இவைகளின் விலை தனித்தனி இரண்டு அணா தான். இனி மேலும் இம்மாதிரியான அநேக புத்தகங்கள் வெளிவரும். அவைகள் சீக்கிரத்தில் வெளிவரவேண்டுமானால், முக்கியமாக ஆங்கிலம் தெரியாத நமது நண்பர்கள் திரவிய சகாயம் செய்யவேண்டுமெனப் பிரார்த்தனை.

ப. நாராயணன்,

பிரசிடேண்டு, பிரஹ்மஞாந சபை, மதுரை.

---

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2. } 1911௵ மேமீ 15௳
விரோதிகிருது௵ வைகாசிமீ 2௳ { பகுதி 1.

## பூர்ணசந்திரோதயம்.

## இரண்டாம் வருஷம்.

இறைவன் அருளாலும், மஹாத்மாக்களின் கிருபையாலும் இப்பத்திரிகையின் இரண்டாம் ஆண்டு இம்மாசம் 15௳ முதல் ஆரம்பமாகிறது. இப்பத்திரிகையை முதலில் பிரதிமாசமும் 32 பக்கங்கள் அடங்கிய சஞ்சிகையாகவெளிப்படுத்த உத்தேசித்தோம். இப்போது சென்றமாசத்தின் பத்திரிகையின் கடைப்பக்கத்தைப் பார்த்தால், 414-ம்பக்கமாகிறது. அதாவது, நாம் ஆரம்பத்தில் உத்தேசித்தபடி 384 பக்கத்திற்கு அதிகமாக 30 பக்கங்களுள்ள விஷயம் சந்தாதார்களுக்கு அளித்திருக்கிறோம். முன்வருஷத்திய தொகுதியின் பொருளடக்கமான உள்ளுறையைப் பார்த்தால், அருமையான பெரிய விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பது நன்கு விளங்கும். இவ்வருஷத்தில் ஒவ்வொருமாதமும் 40 பக்கத்திற்குக்குறையாமல் விஷயங்கள் அடங்கிய பத்திரிகையை வெளிப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். மேலும் பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிய யோகசூத்திரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பும் அச்சூத்திரங்களுக்கு அரிய குறிப்புரைகளும் இப்பத்திரிகையில் மாதந்தோறும் வெளிவரும். இவ்வுத்தேசங்கள் திருப்தியாக நிறைவேறும் வண்ணம் சந்தாதார்கள் முன்பணம் அனுப்புவதுடன் தம்மால் இயன்றவரை, ஒவ்வொருவரும் ஓர் ஓர் புதிய சந்தாதாரைச் சேர்ப்பிக்கும் பக்ஷத்தில், பத்திரிகை இன்னும் அதிக நலம்பெறும்படியாக முயற்சிப்போம். பக்கங்கள் அதிகப்படுத்தப்பெற்றாலும் முன்னுள்ள இரண்டேரூபாய்தான் வருஷசந்தாவாகும். இப்பத்திரிகையின் நண்பர்கள், இப்பத்திரிகை இன்னும் அதிகமாகப்பரவும்படிசெய்து அவ்விதம் நம்ஜனங்களுக்கு உதவிபுரிவார்கள் என்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.

# பகவத்கீதை.

## அதன் மஹிமையும் உரிமையும்.

1. நமக்குக் கிடைத்திருக்கிற உயர்ந்த ஞான்க்கருவூலம் மஹாபாரதம் என்பதாம். அஃது ஐந்தாம் வேதமென்று சொல்லத்தக்கதாய் உயர்வற உயர் நலம் அமைந்துள்ளது. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், அதாவது அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு புருஷார்த்தம் பயக்கும் தன்மையது. வேதமும் உபநிஷத்தும் சிறுபான்மையருக்கே பிரயோஜனப்படக்கூடியவை. இம்மஹாபாரதமோ பிராமணன் முதல், பஞ்சமன் ஈறாக, யாவருக்கும் பயன்படும்படி இதிஹாஸரூபமாக வெளிப்பட்டிருக்கின்றது. நான்கு வேதங்களையும் தொகுத்து வகுத்தவரான ஸ்ரீபகவான் வியாஸ மஹரிஷி, பரமகருணையால், நான்கு வருணத்தார்களுக்கும் அவர்களுக்குப் புறம்பாயுள்ள ஏனையருக்கும் பிரயோஜனமாகும்படியாக, அறமுறைகளையும் தவமுறைகளையும் புராணம் இதிஹாஸங்களின் வாயிலாக உபதேசித்துள்ளார். அவைகளில் கம்பீரமானது இம்மஹாபாரதம் என்பதாம். இஃது ஐந்தாம்வேதமெனப் பெயர் பெறும்.

2. இம்மஹாபாரதத்தின்கண், ஞானரத்னங்களான பகவத்கீதை, அநுகீதை, ஸநத்ஸுகீதை முதலியவைகள் அமைக்கப்பெற்றுள்ளன. இவைகளுள் பகவத்கீதை என்பது உயர்வற உயர்நலம் அமைந்தது. இது பூர்ணஅவதாரமென்று பிரஸித்திபெற்ற பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவினாலேயே, இனி வரும் ஜனங்களின் பிரதிநிதியான, நரன் என்று பெயருள்ள அர்ச்சுனனுக்குக் கானரூபமாக உபதேசிக்கப்பெற்றது. புண்ணியம், பாவம் என்ற இரண்டுக்கும், தெய்வசம்பத்து அசுரசம்பத்து என்ற இரண்டுக்கும், தினம் தினம் உலகத்தில் நடக்கும் போரின் பிரதீகமாக, குருக்ஷேத்திரத்தில் நடந்த மஹாபாரத யுத்தத்தில், இந்த ஞான உபதேசம் ஏற்பட்டது. இஃது ஏற்பட்டு இற்றைக்கு 5,000 வருஷங்களுக்கு மேல் ஆய்விட்டது. கலியுகம் பிறக்கும் சமீபகாலத்தில், கலியில் பிறக்கும் ஜனங்கள் உலகவாழ்க்கையை நடத்தவேண்டும் முறையை ஈசுவரனே நேரில் சரீரம் எடுத்து அவதரித்துத் தம்முடைய திவ்வியவாக்கால் அருளியது இது. இக்கீதையின் பரமஉபதேசம் யாதெனில்: உலகவிஷயங்களைத்

துறத்தல் என்ற கீழான துறவைவிட, அவைகளின்மேலுள்ள மனப்பற்றை விடுதலும், அதனால் ஆசைகளை அறுத்தலும், மனத்தூய்மை அடைதலும், அதனால் யோகியானவன் எவ்வித உலக உத்திரவாதங்களைச் செய்தாலும் இவைகளின்கண் ஈடுபடாமல் மனச்சாந்தம் பெறுதலும், அதனால் இடையறாமல் தியானபரனாய் நடைபெறுதலுமாம். ஞானியானவன், "உள்ளூரிருந்தும் தம் உள்ளமறப்பெற்றாரேல், கள்ளவிழ்சோலையாம் காட்டுளார்" (அறநெறிச்சாரம்) என்ற முதுமொழிக்கிணங்க, நாடு நகரங்களைவிட்டுக் காடுசென்று தவம் செய்யவேண்டுவதில்லை என்பதும், ஈசுவரனுடன் இரண்டறக்கலத்தல் என்ற உயர்நிலையை உலகத்தில் இருந்தே பெறலாம் என்பதும், அந்நிலையைப் பெறுதலுக்குப் பகைகளான தடைகள் நமக்குப்புறம்பாக இல்லை என்பதும், அப்பகைகள் நம் உள்ளத்தில் உள்ளனவென்பதும், அவைகளை அப்பியாசம், வைராக்கியம் என்ற இரண்டு உபாயங்களால் விலக்கிக்கொள்ளலாம்என்பதும், அக்கீதாசாஸ்திரத்தின் உபதேசமாம்.

3. இவ்வாறு கீதையானதுயோகமுறையைக்கற்பிக்கும் யோகசாஸ்திரமாம். யோகம் என்றால் ஐக்கியம் எனப் பொருள்பெறும். அதாவது, உலக முறையில் ஈசுவர சங்கற்பம் இன்னதென அறிந்து அச்சங்கற்பத்துடன் நேர்மையாக இருத்தலும், வெளியேறிய பிரவிருத்திகளை நிரோதம் பண்ணி, உள்நோக்குதலும், அந்நெறியில் பயிலுதலுமாம். இந்நிலையைப் பெறுதலுக்கு மனச்சமாதானம் வேண்டும். ஒழிவு வேண்டும். துவந்தங்களான, சுகதுக்கங்கள், விருப்பு வெறுப்புக்கள், இவைகளின்கண் ஊசலாடும் மனத்தை மாற்றல் வேண்டும். இத்துவந்தங்களால் மனம் சலியாமல் நடைபெறும்படி செய்தல் வேண்டும். மிதம் என்பதே, இக்கீதையில் தொனிக்கும் பரம ரகசியமாம். மனிதனின் எல்லா சுபாவங்களும் அம்சங்களும், குணங்களும் பரமாத்துமாவின் சங்கற்பத்துடன் முரணாமல் நேர்மையாக நிகழவேண்டுமென்பதே, கீதா சாஸ்திரத்தின் முக்கியமான கருத்தாம்.

4. அழகானவைகளைக் கண்டால் ஆசையும், வெறுப்பானவைகளைக் கண்டால் துவேஷமும் ஒருவன் கொள்ளற்பாலதன்று; அவை

இரண்டும் ஈசுவரன் ஸ்வரூபமென்றும், உலக விகாசமுறையில் அவன் அபிவிருத்தியின் பொருட்டு அவை ஏற்பட்டுள்ளனவென் றும், அவன் நினைக்கத்தக்கது. எச்சங்கடங்கள் நேரினும், எக்குழ ப்பங்கள் உண்டாயினும், எத்தகைய போர்கள் நிகழினும், சாந்த மும் மங்களமுமான பரமாத்துமாவினிடம் முழுமனமும் வைத்துத், தான் செய்யக் கடமைப்பட்ட கர்மங்களை முடிக்கவேண்டுவதுதான். அப்படிச் செய்தல், அவைகளின் பயனை எதிர்பார்த்தன்றும்.

வானின்றி டிக்கில் என்? மாகடல் பொங்கில் என்?
கானின்று செந்தீ கலந்துடன் வேகில் என்?
தான் ஒன்றி மாருதம் சண்டமடிக்கில் என்?
நான் ஒன்றி நாதனை நாடுவன் நானே.—திருமந்திரம்.

தன்னிருதயமே பலிபீடமாம், ஈசனிடம் அன்பே ஹோமாக் கினியாம், தன் கர்மங்களே ஆஹுதியாம். அவ்வாஹுதி செய்த மேல், அதன் பலனில் கருத்தில்லை, கவனமில்லை, இத்தன்மையாக ஒவ்வொருவனும் தன்னை நேர்மைப்படுத்திக்கொள்ளற்பாலது.

5. இந்த உபதேசநூலுக்கு உரித்தானவர் யாவர்? இந்நூல் கலியுக முகப்பில் ஏற்பட்டது. மஹாபாரத யுத்தத்தினால், இந்தி யாதேசத்தின் காவலாகஇருந்த க்ஷத்திரியர்களின் சக்தியும் பலமும். குன்றி, வரவரப் பொய்த்தும் போயிற்று. அதனால், இந்தியா தனி த்திருக்கும் நிலைமை போயிற்று. உலகத்திற்கே, பொதுவான சொத்தாய்ஏற்பட்டுவிட்டது. அதனால்,அதன் ஞானசாஸ்திரங்களும் உலகத்திற்கே பொதுவான சம்பத்தாக ஆகிவிட்டன. ஆகவே, இக்கீதையை உரிமை கொண்டாடுமியல்பினர், அதைப் படிக்கும் அதிகாரிகள் ஆவர். நாமாக யுக்தியினால் அவ்வதிகாரிகள் இன்னார் என விஸ்தாரம் செய்யவேண்டுவதில்லை. அதை அருளிச்செய்த பகவானே, இன்னார் அதிகாரியென அடியில் வருமாறு உபதேசித் துள்ளார்.

"இது தவமில்லாதனுக்கு ஒருபோதும் சொல்லத்தக்கதன்று; பக்தனல்லானுக்கன்று; கேட்க விருப்பமில்லானுக்கன்று; பண்பில் லானுக்கன்று; எவன் என்னைப்பற்றி இடக்குப் பேசுகின்றானோ அவனுக்குமன்று."

"என்னிடம் மேலான அன்பு வைக்கின்றவன், என் பக்தர்கட்கு இந்த உயர் நலம் அமைந்த உபதேசத்தை உரைக்கவேண்டியது. அவன் என்னை அடைவான்;"

"மனிதரில் அவனைவிட எனக்குப் பிரியமான காரியத்தைச் செய்பவன் ஒருவனும் இல்லை. மேலும் அவனினும் பிரியமானவன் வேறு ஒருவனும்இல்லை."

"தர்மமுறையினின்று தவருததான நம்மிருவருடைய இச்சம்பாஷணையை எவன் படிப்பானே, அவன், ஞானயஜ்ஞத்தால் என்னைப் பூஜித்தவன் ஆவன்."

"எவன் நம்பிக்கையுள்ளவனுய், ஏளனம் செய்யாமலும், அஸூயையில்லாமலும், இந்நூலைக் கேட்கவாவது செய்வானே அவனும் கூட விடுபட்டவனுய், நல்லலோகங்களை அடைவான்." (கீதை 18-அத். 67, 68, 69, 70, 71—சுலோகங்களைப் பார்க்க.)

6. மேற்கண்ட சுலோகங்களில், இன்ன வருணத்தார், இன்ன ஜாதியார், இன்ன நாட்டார், இன்ன ஆச்சிரமத்தார் படிக்கலாம், கேட்கலாம் என்ற விவஸ்தை ஏற்படவில்லை. அவ்வி நம் படிப்போர் கேட்போர் லக்ஷணம் ஒன்றே. ஈசுவரனிடம் பக்திவேண்டும்; இந்நூலில் நன்னம்பிக்கைவேண்டும். அவன் எச்சாதியானுக இருப்பினும், எவ்வருணத்தானுயினும், எவ்வாச்சிரமியாயினும், இறைவனிடம் அன்புபாராட்டுவோனுகில், இக்கீதையில் நல்லநம்பிக்கைஉடையானுயின், அவனுக்கு இந்நூல் உரித்தாம். இந்நூல் தேசம், காலம், வர்ணம், ஆச்சிரமம் என்ற வரம்பு கடந்து, ஞானசூரியனுய் யாவருக்கும் எக்காலத்தும் பயன்படக்கூடியது. அவ்வரம்பை ஏற்படுத்துகின்றவர், பகவான் வாக்கியத்திற்குவிரோதம் செய்கின்றவராவர்.

7. சிலர் கீதையின் பொருளை ஸம்ஸ்கிருதமில்லாத ஏனைய பாஷைகளில் யாவரும் தெரிந்துகொள்ளலாம் என்பார்கள். ஈசுவரனே கானம்செய்த அந்த உயர்ந்த பாஷையான ஸம்ஸ்கிருத பாஷையில் அக்கீதையைச் சாக்ஷாத்தாக, பிராமணர்கள் நீங்கலாக, மற்றையோர் படித்தல் கூடாது என்பார். இது சொற்ப ஆராய்ச்சியில் தவறு என விளங்கும். நம் தேசத்திலுள்ள சமயமுறை சாஸ்திரங்

கள் இருபான்மையன. சில, வேதம் போன்று ஸ்வரம் முக்கியமாகவும் அர்த்தம் கௌணமாகவும் உள்ளன; இவைகள்தான், ஸம்ஸ்காரங்கள் பெற்ற பிராமணர்கள் மாத்திரம் படிக்கத்தக்கவை. ஏனையர் வாக்குச் சுத்தமில்லாமையால், இவைகளை வாசிக்கவும் உச்சரிக்கவும் அநருகர்கள். ஸ்வரத்தில் பிழைகள் நேரிடினும், இந்திர சத்துரு கதை போல, விபரீத சம்பவங்கள் நேரிடும். ஸ்வரங்கள் ஈசுவர கலைகளாகிய தேவதைகளின் சூக்ஷ்ம சரீரங்கள், கோசங்களாம். மற்றவைகளுக்கு அர்த்தம் தான் முக்கியமானது. ஸ்வரம் கௌணமானது. ஸ்வரப்பிழையால் அர்த்தப்பிழை நேரிடுகிறமட்டில், ஸ்வரம் முக்கியமாம். சிலர் சொல்லுகின்றதாவது, கீதையின் அநேக சுலோகங்களும் அநேக வாக்கியங்களும், உபநிஷத் சுலோகங்களாகவும் வாக்கியங்களாகவும் இருக்கின்றமையால், உபநிஷத்துக்களைப்போல, கீதையைப் பிராமணர்கள் தவிர ஏனையர்வாசிக்கலாகாது. இந்த ஆக்ஷேபணையும் சரியன்று, சாக்ஷாத்தாக உபநிஷத் சுலோகங்களைப் பூர்ணமாய் எடுத்து உபயோகம் செய்யாமல், அச்சுலோகங்களில் சில பதங்களை விட்டுப், வேறு பதங்களைச் சேர்த்தும், புதுசுலோகங்களைப் பகவான் சொல்லியிருக்கிறதைப் பார்க்கும் அளவில, இப்போது ஏற்பட்டுவரும் கக்ஷியை முன்னேக்கியே அதை விலக்குவதற்காகவே அவ்விதம் செய்துள்ளார் எனத் தோன்றும்.

8. சுருங்கச் சொல்லுமிடத்து இவ்வாக்ஷேபணைகள் எல்லாம், வீண் எனத் தெரியவரும். மஹாபாரதம் எல்லாருக்கும் பொதுவாய் ஏற்பட்டுள்ளது. அதன்கண் பகவத்கீதை உள்ளது. மஹாபாரதத்தை அருளின வியாசபகவான், பகவத்கீதை நீங்கலாக என்று ஒரு இடத்திலும் பிரஸ்தாபித்தாரில்லை.

9. பகவத்கீதையானது யாவருக்கும் உரித்தானது. ஆனல், இறைவன் அருளால் கிடைத்த நூலாகையால், அவர் அவர் அறிவின் பக்குவ நிலைக்குத் தக்கவாறும், மனத்தின் ஸம்ஸ்காரத்திற்குத் தக்கவாறும், அவரவர் படிக்கும் முறைமைக்கும், சிந்தனைக்கும் தியானத்திற்கும் தக்கவாறும் அதன் பிரயோஜனம் விரிந்தும் குறுகியும் நிகழ்வதாகும். நமக்குத் திவ்விய திருஷ்டியும், திவ்விய

சிரவண சக்தியும் ஏற்படுமாகில், ஒவ்வொரு சுலோகத்தையும் சரியானபடி தியானிப்போமாகில், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா செய்த கானத்தையே கேட்கும் பாக்கியத்தைப் பெறுவோம். சோகமற்று ஆசையற்று, அகந்தை, மமதை அற்று, பிறவி எல்லாம் துன்பமெனப் பயந்து ஜீவகாருண்ணியமுள்ளவராய், ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் அன்புள்ளவராய், தம்மை அர்ச்சுனன் ஸ்தானத்தில் இருப்பவராக மதித்தும் உண்மையை அடைவதில் தாகமுள்ளவராய் நிகழும் நல்லோருக்கு அவர் வெளிப்படுவர். அன்னோர் அவர் கானத்தையும் கேட்பார்களென்பது திண்ணம். ஓம் தத் ஸத்.

ப. நா.

---

## நன்மொழி.

---

89. விக்கிரக ஆராதனை, பக்திமுறை பழக்கத்தில் இன்றியமையாத சாதனமாம். அலையும் மனத்தை ஒரு நிலையில் நிற்கும்படி செய்தலுக்கு அநுகூலமாம். பக்தியின் முதற்படியில் இது அதியவசியம். ஆராதனைக்காக விக்கிரகம் அமைத்துக்கொள்ளுவதில், ஈசுவராதிகள், பூர்ணம்பெற்ற ஞானிகள், இவர்களின் விக்கிரகங்களை அமைத்துக்கொளல் வேண்டும். அவர்கள் சம்பந்தமான புராணங்களைப் படித்தல் வேண்டும். அவர்களின் கல்யாணகுணங்களைச் சிந்தித்தல் வேண்டும். அவைகளை உபாஸகன் தன்னிடம் அமையும்படி மனமுருகவேண்டும்.

90. உயர் நலம் அமைந்த எண்ணங்களை அடிக்கடி சிந்தனை கொள்ளுதல் நன்மையாம். அத்தகைய சிந்தனை அதிகப்பட அதிகப்பட, சிந்திக்கும் மனம் அத்தன்மையானமாறுதலை (ஸம்ஸ்காரத்தை)ப் பெறும். எவ்விதம் நினைப்போ, மனம்அவ்விதம் மாறுதலை அடையும்.

# 'உதய சூரிய சங்கம்.'

---

"உலகத்தில் தருமத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு ஏற்றமும் வரும்போதெல்லாம் யான் என்னைப் படைத்துக்கொள்ளுகிறேன். நல்லோரைப் பாதுகாத்தற்கும், தீயன செய்வோரை முற்ற ஒழித்தற்கும், தருமத்தை நன்கு நாட்டுதற்கும் யான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்," என்பதாக பகவான் கீதையில் அருளியிருக்கிறார். அத்திருவாக்கை அனுசரித்து, இக்காலகதியை அறிவுடனே ஆராய்ந்து பார்க்கில், ஒரு மஹாபுருஷன், குருவாக, அவதாரமாவார் என்பதாக, அறிஞர்களிற் சிலர் சொல்லுகின்றார்கள். அம்மஹாபுருஷன் நல்வரவை பக்தி விசுவாஸத்துடனே, எதிர்கொண்டு அங்கீகரிக்கவும், விரும்பவும், வேண்டுமென்ற கருத்துடனே சென்ற ஜனவரிமீ 11உ-யில் 'உதய சூரிய சங்கம்' என்று பெயருள்ள ஒரு சங்கம் திவ்விய க்ஷேத்திரமாகிய காசிநகரில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது. இப்போது நடைபெற்றுவருகின்ற இந்திய புத்திரர்களின் சங்கத்தைப் போலவே அதன் கருத்தும் பொதுஜன கைங்கரியம்புரிதலுக்காக இருப்பினும், அச்சங்கத்தைவிட, இந்தப்புதிய சங்கத்தின் நோக்கங்களும் லக்ஷியங்களும் இன்னும் வியக்தமாகவும் தெளிவாகவும் இருக்கின்றன. ஒரு மஹாகுரு சமீபகாலத்தில் வெளிவரப்போகின்றார் என்பதைப் பிரசித்தப்படுத்தவும், அவர் வருங்கால், அவர் நல்வரவை ஜனங்கள் ஆதரவுடனே அங்கீகரிக்க நேர்மையானபடி ஜனங்களை ஆயத்தம் செய்யவும், ஜனசமூகத்தில் அன்பும், தயையும் மேன்மேலே பரவச்செய்யவும், இச்சங்கம் ஏற்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் அங்கத்தினர்களின் கொள்கைகளாவன:—

1. உலக க்ஷேமத்தின் பொருட்டு ஒரு மஹாகுருவானவர் சமீபகாலத்தில் அவதரிப்பார் என்ற நன்னம்பிக்கையும், அவர் வெளிப்படுங்கால் அவரை அத்தன்மையான குருவென அறியும் இயல்பும்,

2. அவரை எப்போதும் தம் மனத்திற் சிந்தனை கொள்ளுதலும், செய்யும் எக்கருமத்தையும் அவர் கைங்கரியமாகச்செய்தலும்,

3. தினந்தோறும் அவர் அவர் லௌகிக காரியங்கள் செய்து வருவதில் ஒரு சமயத்திலாவது அக்குருவின் வரவை நோக்கிய யத்தனங்கள் யாதேனும் ஒன்றைச் செய்ய முயலுதலும்,

4. பக்தியும், மன உறுதியும், சாந்தமும், தங்களுடைய சீலத்தில் முக்கியமான அம்சங்களாய் அமையும்படி முயற்சித்தலும்,

5. தாங்கள் அம்மஹாபுருஷனின் பொருட்டு நடத்த முயலும் ஒவ்வொரு காரியத்திலும், அவருடைய அருள்வெள்ளம் இரங்கும்படியாக, தினந்தோறும் முதலிலும் முடிவிலும், பிரார்த்தனை செய்தலும்,

6. எவரிடத்திலும் நலம் தோன்றினால், அதை அறிதலும் ஆதரவு செய்தலும், நன்குமதித்தலும், வணங்குதலும், ஞானமுறையில், நம்மின் மிக்கோர் மூத்தோர் உபதேசிக்கும் விதிகளைத் தலைமேற்கொண்டு நம்மால் கூடியவரை நடத்தலும்,

இவைபோன்றவையுமாம். இச்சங்கத்தின் விவரங்களைப்பற்றி அடியிற்கண்ட விலாசத்தாருக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

Prof. E. A. WOODHOUSE,
Theosophical Society, BENARES CITY.

---

## நன்மொழி.

91. ஆநந்தம் எங்குள்ளது? உயர்மரம் அடர்ந்த காட்டிலோ? உன்னத மலையிலோ? அதன் அடிவாரத்தின் குகையிலோ? மடுவு, அருவிகளிலோ? ஆறுகள், ஓடைகளிலோ? கடல் மேலிலோ? நாடு நகர்களிலோ? வீட்டிலோ, ஜனக்கூட்டிலோ? கோவில் குளங்களிலோ? நாடினேன், தேடினேன், நாடி நாடி, சோர்ந்தேன், இளைத்தேன், களைத்தேன். கண்டிலன். ஒரு மரத்தடியில் இருந்தேன், தண்ணீர் குடித்தேன், சாதம் உண்ண நினைத்தேன், எடுத்தேன், பசியால் வருந்தின ஒருவன் ஒரு கவளம் வேண்டினன். கொடுத்தேன், அவனும் முகம்மலர்ந்தனன், நானும் தேடினபொருளைக் கண்டேன். களித்தனன், ஆநந்தித்தேன்.

# யோகம்.

சற்குரு கடாக்ஷம் முன்னிற்க.

யோகமென்பதைப் பலவாறாக எடுத்துக் கூறுவதுண்டு. அஃது அஷ்டாங்கயோகம், இராஜயோகம், ஹடயோகமுதலியவைகளெனக் கூறுவர். யோகமென்னும் பதத்திற்குத் தியானமென்றுங் கூடுதலென்றும் சாஸ்திரங்களில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இங்குரைக்கப் புகுந்த யோகம் கௌணமெனவும், முக்கியமெனவும் இருவகைத்தாம். அதில் கௌணயோகமானது ஐந்துவகையாம். (1) மந்திரயோகம் (2) பரிசயோகம் (3) பாவயோகம் (4) அபாவயோகம் (5) மகாயோகம் என்பனவாம்.

(1) மந்திரயோகமாவது:—பிரணவ முதலிய மந்திரங்களின் அநுசந்தானத்தாற் பிரம்மதர்சனமாதலாம். அது பிரணவம், பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலிய மந்திரங்களையிடையறாது நேர்மையாகச் சிந்தித்தலால் பிரமோதயமாய், அதன்கண் மனம் லயமாதலே மந்திரயோக மென்னப்படும். இதற்கு மேற்கோள் (பிரமகீதை)

"தீம ரந்தோறு மடைந்தழி வுறாது தெரிவா
காம னின்றரணி யால்வடிவு காணுமதுபோல்
ஆமு டம்பிலறி வின்றிமறை கின்ற அமலன்
ஓமெ னும்பொரு ளுணர்ந்திட வுடம்பின் வெளியாம்"

என்பதனாற் காண்க.

(2) பரிசயோகமாவது:— அந்த மந்திரயோகத்தோடு இங்கே விவகரிக்கிற மனமும் பிராணவாயுவும் ஒன்றாய்க்கூடி மூலாதாரத்திலிருந்து, மகத்துவந் தங்கிய சுழிமுனை நாடி மார்க்கத்திலேறி, சிரசின் மத்திய பிரமரந்தரத்திலிருந்த நிறைவான ஆத்மப் பிரகாசத்தில் அம்மனம் லயிப்பதேயாம். அஃது இடை, பிங்கலை நாடிகளையடைத்து சுழிமுனை நாடி மார்க்கத்திற்சென்று மூலாதார முதல் ஆஞ்ஞையீறான ஸ்தானங்களிலுள்ள தேவதைகளோடுங்கூடி, மேற் பிரமரந்தரத்திலுள்ள பிரம்மத்தோடுங் கலத்தலே பரிசயோகமாம். மேற்கோள் (வாதவூர்புராணம்)

"மூக்கு ணைம்புல னைந்துடனடக்கி
மூல வாயுவை யழைத்திரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வைந்தெழுத் தோரெழுத் துருவாந்
தன்மை கண்டவர் தரும்பெரு வெளிக்கே
புக்க முந்தின ரெமதுருப் பெறுவர்
புவியில் வேட்டுவ னெடுத்தமண் புழுப்போல்".

என்பதனாலுங் காண்க.

(3) பாவயோகமாவது:—சீவேசுர சகங்களனைத்தையும் அவயவங்களாகக் கண்டு அவைகளை நீக்கிய விடத்துள்ள அவயவியைப் பிரமமாகப் பாவித்தலாம். அதில் சுவர்க்கம் சிரசாகவும், திக்குகள் காதுகளாகவும், சந்திர சூரியர்கள் கண்களாகவும், அக்கினி அழகான வதனமாகவும், ஆகாயம் தொப்பூழாகவும், பூமி பாதங்களாகவும் விளங்கிய பிரமஸ்வரூபமான விராட்புருஷ ஸ்வரூபத்தையானாலும், அல்லது அளவிறந்த மாட்சிமையுள்ள புஜங்களையும் அவற்றிற்குத் தக்க ஆயுதங்களையும் அவற்றிற்கேற்ற ஆபரணத்தோடுங் கூடிய பரமேசுவர ஸ்வரூபத்தையானாலுஞ், சிந்தித்து மேற்கூறிய அவயவங்களில் ஒவ்வொன்றாக நீக்கி சேடித்திருந்த அவயவி மாத்திரமாய்நின்ற சத்துரூபமாகிய பிரம்மத்தில் மனம் லயிப்பதே பாவயோகமாம். மேற்கோள் (வாசிட்டம்)

"கரையறு பரமாகாசம் கதித்தறப் பருத்தகண்டம்
புரையறும் தன்கீளெல்லை யற்ற விண்பொற்றாட் கஞ்சம்,
நிறைபயின் முடிபுதிக்கு நீண்டறவுயர்ந்த தோள்க
ளுரையுயிர் கானுலோக மொளிகொளாயுதங்களாமே.

என்பதனாலுங் காண்க.

(4) அபாவயோகமாவது:—அங்ஙனம் பாவிக்கும் மனத்துக்கு அகோசரமான விடத்துள்ள பிரம்மத்திற் பாவனாதீதமாய் நிற்றலாம். அது விஷயங்களில் சென்றடையாநின்ற அந்தக்கரணத்துக்கு அகோசரமான ஒப்பற்ற பிரமத்தில் மனோலயமாவதே

அபாவயோகமாம். மேற்கோள் (சுருதிசாரம்)

"தனித்த சுவானுப வாதீதம் பிரமோகமே தாற்
றுனவனு யிருப்பதுஞ் சங்கற்பத்தானு மளித்தமென
விட்டிடிற் சூனியமாதலானும் அது மறவாவிடினிலைவா
யழிதலானும் இனித்த நிட்டை சாதகமாயிருத்தலானும்
ஏதுமல்ல மூடமென்றே இயம்பலானும் தொனித்த
சுபாவமுங் கடந்தவதீதந்தானே
சுயம்பிரகாசமெனவே சொல்வர் தாமே"

என்பதனாலுங் காண்க.

(5) மகாயோகமாவது:—சங்கற்ப முதித்தொடுங்கின விடத்தும் அறிவறியாமை யிடத்தும் ஒரே தன்மையாய் விளங்கும் பிரமமே தானாக விளங்கலாம். அது ஜகசிருஷ்டியினும் லயத்தினும் தனதறிவிலும் அறியாமையிலும் ஒரே படித்தாக நின்றுதானே தானாக விளக்கும் பிரமத்தின்கண் மனோலயமாதலே மகாயோகமாம். மேற்கோள் (ஞானவாசிட்டம்)

"ஆங்கதுவே யதீத பதமாதலாலேயதுகிஞ்சி லன்றெங்கு மதுவேயாகும், பாங்குருவிடென்றும் பாருலகிலில்லை பாதலத்திற் பூதலத்திற் பார்க்கிலில்லை, வீங்கியவாசை களெல்லா மிறந்த காலை விரிந்தமன மிறப்பதுவே வீடென்றேது, மோங்கிய வீடெனக்குளதென்றுள்ளே யென்ன முண்டாகின் மீண்டுமன முற்பவிக்கும்".

என்பதினாலுங் காண்க. இன்னும் சகத்தானது உதயலயமாகின்றது, எவ்விடமோ அவ்விடத்தில் மனம்லயமாவதே மகாயோகமென்று சில கிரந்தங்கள் கூறுகின்றன.

முக்கியயோகமாவது:— இம்முன்னிலைகளியாவுமின்றி சிந்திக்கும்மனத்தின்கண் நிறைந்திருக்கின்ற சுத்தசைதன்யமே யெங்கும் நிறைந்திருக்கின்றதென்னும் அத்துவிதவஸ்து ஆதலே முக்கிய யோகமென்பதாம்.

ம. வேதநாயகதாஸ்ஃ

---

# சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்.

1. மலைகளால் சூழப்பட்டும் கோட்டை கொத்தளங்களால் அலங்கரிக்கப்பட்டும் விளங்குகின்ற இராஜபுதன நாட்டின் ஒரு பாகத்தில் ஒரு சிற்றரசன் வசித்துவந்தான். அஃது ஒரு செழிப்பான இடம். அவ்வரசன் விதிவசத்தால் தன் நாடு நகரங்களையும் சம்பத்துக்களையும் இழக்க நேரிட்டது. "விதியால் வருவதல்லால் வேதத்தோர் தங்கள்மதியால் வருவதொன்றில்லை" என்றவண்ணம் தனக்கு நேரிட்ட கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு தன் மனைவியுடனும் தன் இருகுழந்தைகளுடனும் புறப்பட்டு ஒரு மலைச்சாரலையடைந்து ஆங்கு ஒரு குடிசைகட்டிக்கொண்டு "மெய் வருந்திக்கை செய்து உய்ம்மின்" என்ற பெரியோர் வாக்குக்கிணங்க உழைத்துக் கொணர்ந்த ஊதியத்தை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்துவந்தான். அவ்விருகுழந்தைகளில் மூத்தவன் பெயர் கோபிநாதன். இளையவளுடைய பெயர் சுமதி. சில நாட்களுக்கெல்லாம் தாய் தந்தையர் பரலோகப்பிராப்தி யடைந்தனர். அவர்கள் இறந்த சமயம் கோபிநாதனுக்குப் பிராயம் பதினாறு. "திக்கற்றவருக்குத்தெய்வமே துணை" என்னும் பழமொழி இவர்கள் விஷயத்தில் உண்மையாயிற்று. இவர்கள் உயர்ந்த இராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களாயினும் உற்றார் பெற்றாருடையோராயினும் அவர்களிடம் செல்ல மனமில்லாமற் காட்டிலேயே இருக்கத் துணிந்தனர். தாய் தந்தையரின் பக்தியான நடவடிக்கைகளைக் கண்ணுற்றுவந்த இவர்கள் அவர்களின் நன்மார்க்கத்தையே பின்பற்றினர். "பிராணனை விட்டாகிலும் மானத்தைக் காப்பாற்றுவதே மேல்" என்று நினைப்பது பெரியோர்களின் இயல்பு. அதிலும் இஃது இராஜபுத்திரர் விஷயத்தில் மிகவும் உண்மை. சகோதரனும் சகோதரியும் நிர்மானுஷ்யமான காட்டின் மத்தியில் ஆங்கு கிடைக்கக்கூடிய உணவுகளைப் புசித்துத் தனியாகக் காலம் கழித்துவந்தனர். அவர்களின் அன்புக்கு எதுவும் இணையில்லை. வானுறவோங்கி வளம்பெற வளர்ந்திருக்கும் மரங்கள் அடர்ந்தசோலையின் மத்தியில் குயில் முதலிய பட்சிகள் இனிமையாய்க் கூவ, மயில்கள் தங்கள் அழகிய கலாபங்களை விரித்துக் கம்பீரமாய்க் கேகா சப்தஞ்செய்துகொண்டு ஆட, மான் முதலிய மிருகங்

கள் மருண்ட பார்வையுடன் நாலாபக்கங்களும் ஓடி விளையாட, அச்சோலையின் மத்தியில் சலசலத்த சப்தத்துடன் பெரியோர் மனம் போல் தெளிந்தும் குளிர்ந்துமிராநின்ற நன்னீருடன் சிற்றோடையானது பசும்புற்றரை மத்தியில் ஓடிக்கொண்டிருக்க, பலஜாதி புஷ்பங்கள் நறுமணமுடனும் சூரிய ரஸ்மியின் பல வர்ணங்களைப் பழிக்கும் பல வர்ணங்களுடனும் கொத்துக்கொத்தாய்த் தொங்கி அச்சோலையை அலங்கரிக்க, அவ்விடம் தேவலோகம் போல் விளங்கிற்று. கோபிநாதன் தான் பயின்ற வில்வித்தையால் பகலில் தன் ஆகாரத்துக்கு வேண்டியவற்றைக் கொணர்ந்து கொடுப்பான். சுமதி அவற்றைவாங்கி, வாய்க்கு ருசியாகப் பக்குவப்படுத்தித் தன் சகோதரனுக்கும் இட்டுத் தானும் புசிப்பாள். வேலையில்லா நேரங்களில் இருவரும் சமீபத்தில் வளர்ந்திருக்கும் கோரைகளையும், தர்ப்பங்களையும் கொய்து கொணர்ந்து அழகான பாய்களாகவும், தட்டுமுட்டு சாமான்களாகவும் செய்வார்கள். கைத்தொழில் செய்யுங்கால் கோபிநாதன், இராமாயணம், பாரதம் முதலிய இதிகாச கதைகளையும், புராண கதைகளையும் தன் தங்கைக்குச் சொல்லி அறிவுறுத்துவான்.

சுமதியும் தன் பெயரின் பொருளுக்கிணங்க நல்ல புத்திசாலி தன் தமையன் அன்புடனும் தயையுடனும் சொல்லும் கதைகளைக் கேட்டு ஒழிந்த நேரங்களில் மனனப்படுத்தி பூர்ஜபத்திரங்களில் லேகினியைக் கொண்டும், தானாகச் செய்த மைக்குழம்பைக் கொண்டும் எழுதித் தன் தமையனிடம் காட்டுவாள். தமையன் காட்டில் வேட்டையாடிக்களைத்துவந்த பொழுது அவனுக்கு ஆறுதலாகத் தன்பெற்றோர் வைத்துப்போன வீணையை எடுத்துச் சுருதிகூட்டி இனிமையான இராகங்கள் பாடி மகிழ்விப்பாள். இருவரும் தம் பெற்றோரால் இளம் பருவத்திற் கற்றுக்கொடுக்கப்பட்ட சுலோகங்களையும் பாடல்களையும் சேர்ந்து இனிமையாய்க் கானம்பண்ணி மகிழ்வார்கள். இருவரும் பகவானால் இயற்கையாய் அமைக்கப்பட்ட பொருள்களினின்றும் பல விஷயங்களைக் கூர்ந்துபார்த்து அறிவார்கள். அச்சோலையின் புறங்களிலுள்ள தாமரைத்தடாகத்தின் அழகைச் சூரியோதய காலங்களில் போய்ப்பார்த்து வியந்து அவ்வழகான புஷ்பங்களைப்படைத்த பகவானைத் துதிசெய்வார்கள். அத்தடாகத்திலுள்ள அன்னம், சக்கிரவாக முதலிய பக்ஷிகள் அவர்களது கண்களையும்

மனத்தையும் கவரும். அவற்றின் விளையாட்டையும் சந்தோஷத்தையும் கண்டு களித்துப் பொழுதுபோக்குவார்கள். மான்கன்றுகள் தாயினிடம் பால் குடிக்கையில் சொற்ப அரவத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு மருண்ட பார்வையுடன் நாலாபக்கமும்பார்க்கும் அழகைக் கண்ணுற்றுக் களிப்பார்கள். மலைச்சாரலில் யானைக்கன்றுகள் தம் துதிக்கையால் தாயின் பாலை உண்ணுவதையும் அவைகளிற் சில அம்மலைவிழ் அருவியினின்றும் ஸ்படிகம்போன்ற நீரை வாரிப்பக்கத்துநிற்கின்ற களிறுகள்மேல் முத்துப்போற் சிதறும்படி வீசுவதையும் பார்த்துப்பிரமித்து நிற்பார்கள். சில ஆண்யானைகள் பிடியானைகளுக்குப் பூங்கொத்துக்களடர்ந்த இளம் கொம்புகளை முறித்துக்கொடுத்து உபசரிப்பதை உய்த்துணர்ந்து உளமகிழ்வார்கள். குரங்குகள் உன்னத விருக்ஷங்களின் கொம்புகளைப் பிடித்து ஆட்டி அசைத்து ஒரு மரத்தின் கிளையைப் பற்றித் தொங்கிக் கொண்டு ஊசலாடி அடுத்த மரத்தின் கிளைக்குப் பாய்ந்து குதூகலித்துக் கிச்சிடுவதையும் நோக்கி ஆனந்திப்பார்கள். "கைம்மகவேந்திக் கடுவனோடிக் கழைபாயும்" செம்முக மந்திகளையும், மரத்தின் பழங்களைப் பறித்து மந்திகளுக்குக் கொடுத்து மகிழும் கடுவன்களையும், மந்தி சிந்தும் கனிகளுக்குக் கெஞ்சும் வான்கவிகளையும் கூர்ந்து கவனித்து நிற்பார்கள். காற்றடிப்பதால் உன்னத கிளைகளினின்றும் பழங்கள் உதிர்ந்து 'குளுகுக்குளு' என்று நீரில் விழும் சப்தத்தைக் கேட்டுத் திகைப்பார்கள். மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்து சப்திப்பதையும், அவைகளில் இயற்கையாய் அமைந்த துவாரங்களில் காற்றுமோதி வேணுகானம் நிகழ்வதையும், கேட்டு மெய்ம்மறந்து மயிர்சிலிர்த்து நிற்பார்கள். அச்சமயம் அவர்கள் மனம் யோகிகளின் மனம்போல் அபரிமிதமான ஆனந்தத்தை அநுபவிக்கும். அம்மலைச்சாரலின் அழகு அவர்களுக்கு ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு விதமாகத் தோற்றும்.

2. ஒரு சமயம் அஃது ஒரே நீலமாய் நீலமேகசியாமளனாகிய மகாவிஷ்ணுவின் வடிவுபோல் தோற்றும். மற்றொரு சமயத்தில் வெண்மேகங்களால் மூடப்பட்டு ஒரே வெண்மையாய் வெள்ளியங்கிரி போல் தோற்றும். பின்னும் ஒரு சமயம் சிகரம் நீங்கலாக மற்றைப் பாகமுழுவதும் வெண்மேகங்களால் மூடப்பட்டிருக்கக் கருங்கொம்புகளையும் திமிலையும் உடைய நந்தி என்ற ரிஷபம் படுத்துப்

பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறதோ என்று தோற்றும். வேறு சில சமயங்களில் அடிப்பக்கம் மட்டும் கறுத்து மற்றைப்பாகங்கள்வெளுத்திருப்பது இராவணன் வெள்ளியங்கிரியைத் தூக்கி நிற்பது போல் தோற்றும். சில சமயங்களில் ஊடே மாத்திரம் வெண்மேகங்கள் தோற்றி மற்றவிடங்களில் பச்சைப்பசேலென்று தோற்றுவது, லோகமாதாவான பார்வதி தேவியானவள் பரமசிவனை நாயகனாக அடையவேண்டி வற்கலையுடுத்து விபூதியணிந்து தவஞ்செய்வதுபோல் தோற்றும். சிலசமயங்களில் அம்மலை மூடிக்கொண்டிருக்கும் வெண்மேகங்களில் செவ்வானம் பிரதிபிம்பித்து அம்மலை முழுவதும் ஒரேசிவப்பாய்த் தோற்றுவதானது பரமசிவனே தன் பவள மேனியையும், ஜோதிவடிவையும் காட்டி நிற்பதுபோல் தோற்றும். சில சமயங்களில் ஒரு பாதி பசுமையாயும், மற்றொரு பாதி வெண்மையாயும் தோற்றுவது பார்வதிபரமேஸ்வரர்களுடைய அர்த்தநாரீசுவர வடிவம் போல் தோற்றும். ஒரு சமயம் அம்மலையின் அடிப்பக்கமெல்லாம் சிவந்து மேற்பாகம் மட்டும் வெண்மையாகத் தோற்றுவதானது பரமசிவன் தன் சிரசில் கங்கையையும் சந்திரகலையையும் தரித்துக்கொண்டு இருப்பது போல் தோற்றும். சில சமயங்களில் உச்சியில்படிந்த மேகங்கள் செவ்வானத்தின் பிரதிபிம்பத்தால் சிவப்பாய்த் தோற்றுவதானது ஜுவாலையை வீசுகின்ற எரிமலை போல் தோன்றும். இவ்வற்புதக் காட்சிகளையெல்லாம் கண்ணுற்று அவ்விருவரும் பரமானந்தமடைவார்கள்.

3. சுமதி அச்சோலைக்கு நடுவில் அமைக்கப்பட்ட தன் சிறு குடிசையை மாசுமறுவின்றிச் சுத்தமாய் வைத்திருப்பாள். அதனைப் பார்த்த மட்டிலே அவளது மனத்தூய்மை வெளிப்படும். அதன் தரைகளும் சுவர்களும் பளபளவென்று பளிங்குபோல் காணப்படும். திலகம் தீட்டிக்கொள்ள வேறு கண்ணாடி வேண்டுவதில்லை. அவ்வீட்டைச் சுற்றிப் பல பூச்செடிகளும் கொடிகளும் குழவிகள்போல் போற்றப்பட்டுவந்தன. சூரிய கிரணம் சிறிதும் நுழைய இடமில்லாத லதாகிருகங்கள் அவ்வீட்டின் நான்கு புறங்களிலும் அமைக்கப்பெற்றிருந்ததானது பச்சைக்கூடாரம் அடித்தாற்போல் காணப்படும். சிற்சில சமயங்களில் அவைகளில் உட்கார்ந்துகொண்டு சுமதி கானம் செய்வதுண்டு. சிற்சில சமயங்களில் ஆங்குள்ள நறுமலர்களைக்

கொய்த இனிய பூமாலை தொடுத்துப் பகவானுக்கு அர்ப்பணஞ்செய்து தன் தமையனுக்கும் தந்து தானும் சூட்டிக்கொள்வாள். மாலைப்பொழுதின் மஞ்சள்வெயிலில் சில சமயம் அச்சகோதரர் இருவரும் அதனருகே ஓடும் ஓடையின் கரையில் உட்கார்ந்து பகவத் சிருஷ்டியின் அற்புதக் காட்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். அச்சமயம் பலவர்ணச் சிறகுகளையுடைய பக்ஷிகள் கூட்டங்கூட்டமாய் அச்சோலையின் அடர்ந்த மரங்களில் கூடிக் குதூகலித்து ஆரவாரிப்பதைக்கேட்டு மகிழ்வார்கள். மான்கன்றுகள் ஆங்குள்ள மரங்களின் நறுநிழலில் நிர்ப்பயமாய்ப் படுத்துறங்கும். சிற்சில சமயங்களில் சுமதியின் மடியில் தலைவைத்துக் கண்வளரும். இரவில் சுமதி வேலையாயிருக்கும் அடுப்பருகில் படுத்து அவளைப் பார்த்த வண்ணமாய் அசை போட்டுக்கொண்டிருக்கும். அச்சமயம் அடுப்பின் அக்கினியினது ஒளி அக்கன்றுகளின் கண்ணொளியிற்பட்டு அவ்வறைக்குத் தீபமிட்டது போல் விளங்கும். கோபிநாதன் அக்கன்றுகளின் கண்களுடைய ஒளிக்கும் தங்கை சுமதியினது கண்களின் ஒளிக்கும் பேதமறியாமல் பிரமிப்பான். இவ்வாறு யோகிகளும் வசிக்க விரும்பும் தூய்மையும் இனிமையுமான அக்குடிசையிலேயே அச்சிறுவர்கள் வசித்துக்கொண்டு உல்லாசமாகக் காலங்கழித்து வந்தனர்.

(இன்னும் வரும்.)

எஸ். சாமிநாத அய்யர்.

## நன்மொழி.

---

92. புளியம்வித்தினால், ஒரு உலகதர்மத்தைக் காண்போம். புளியம் முளை பின்பு கன்று ஏற்படவே, வித்து போய்விடும், மாண்டுபோம். உண்மையில், மரணமில்லை. அவ்வித்து, முளையாகவும், பின்பு கன்றாக மாறிவிட்டது. இது பரிணாமம் என்பார். இவ்விதமே உலகத்தில் மரணம் என்ற தர்மம் நிகழும். ஏதாவது ஒன்று இருந்து பின்பு நாசம் உறுதல் என்பது கிடையாது. மாறுதலையே நாசம் என்று நாம் எண்ணுகிறோம். ஈசுவரனின் ஓர் அம்சமே இப்பிரபஞ்சமாக பரிணமித்திருக்கிறதென்று ரிக்வேதத்திலுள்ள மஹா மந்திரமாகிய புருஷஸூக்தம் கம்பீரமாக உபதேசிக்கின்றது.

6-ம் அதிகாரம்.

[முதல் தொகுதியின் 398-ம் பக்கத் தொடர்ச்சி.]

## மனிதவர்க்கம் சஞ்சரித்து விகாசம் பெறும் மூன்று லோகங்கள்.

i. மனிதன் சஞ்சரிக்கும் லோகங்களுக்கு பலவாறான பெயர்கள் உண்டு. அவ்வொவ்வொரு லோகத்திற்கும் பலவாறான உட்பிரிவுகள் சொல்லப் பெறுகின்றன. அப்பிரிவுகளில் மனிதன் வசிக்கும் கால அளவைப் பற்றியும் வித்தியாசமான அபிப்பிராயங்கள் உள்ளன. ஆயினும் இவ்விதமான வேற்றுமைகளுக்குப் புறம்பாகவும், ஆனால் அவைகளுக்கு ஆதாரமாகவும் சாமான்னிய சில விஷயங்கள் பொதுவாக இருக்கின்றன.

வேற்றுமைகளை விலக்கி, அப்பொதுவான சாமான்னிய முக்கிய விஷயங்களாவன:—

i. இப்போது மனிதன் வசிக்கிற பிராகிருத லோகமான இப்பூமியில் ஸ்தூல சரீரத்துடன் மனிதன் ஜீவிக்கிறான். இதில் கர்மங்கள் என்ற வித்துக்களை விதைக்கிறான். இவைகளின் பலனை இறந்த மேல் அறுக்கிறான், அனுபவிக்கிறான். இனிவரும் காரியங்களுக்குக் காரணமான கர்மம் செய்வது இப்பூமியில். அதனால் இது கர்ம பூமி யெனப் பெயர்பெறும். மனிதன் இதன்கண் கழிக்கும் காலம், மற்ற லோகங்களை உத்தேசிக்க சிறிதாயினும், இதன்கண் அவன் செய்யும் கர்மம் மற்றைய லோகங்களின் வாழ்வுக்கு முக்கியமாக இருக்கின்றமையால், பூமிக்கு அவ்வளவு உயர்வு ஏற்பட்டுள்ளது.

ii. மனிதன் இறந்தமேல் செல்லும் லோகத்திற்கு பல பெயர்கள் உண்டு. இதற்குப் பல உட்பிரிவுகளும் உள்ளன. Purgatory (பாவவிமோசனஸ்தானம்), Summerland (கோடைகாலம் என்றுமுள்ள தேசம்), Modified hell (ஏகதேச நரகம்), Desire land (காமலோகம்), Ghost land (பிரேதலோகம்) இப்பெயர்களைக் கவனிக்குமளவில், அவைகளைப்பூமிக்கும், இனி வேறு ஒரு லோகம்

அல்லது நிலைமைக்கும், நடுவான லோகம் அல்லது நிலைமையைக் குறிக்கின்றன. இந்நிலைமை சில சமயம் துக்ககரமாகவும், சில சமயம் சுககரமாகவும், சில சமயம் பரிசுத்தம் செய்யும் இயல்பினதாகவும், சில சமயம் தண்டனைக்குரியதாகவும், இருக்கின்றமையை நாம் கவனிக்கவேண்டும். இந்நிலை, பூர்ண ஆநந்தம் பயக்கும் நிலை அன்று என்றும் அல்லது சிலருடைய அபிப்பிராயப்படி குறை வில்லாத் துக்கநிறையுள்ள நிலை அன்று எனவும் தெரியவருகிறது.

iii சுவர்க்கம்: துக்கமே லவலேசமும் இல்லாததும், புகுதல் கூடாததுமான ஸ்தானம். "அசுத்தப்படுத்து மியல்பினதாகியவை புகுதலில்லாத ஸ்தானம் அது"* அதில், பூமியில் உள்ள மனிதன் நினைவுக்கும், கனவுக்கும் மேலான ஆநந்தமும், சாந்தமும் உள்ளன. இதுதான் அதில் வாழ்பவனுன அதிர்ஷ்டசாலியின் கதி.

இவை மூன்றும்தான், மனிதன் சஞ்சரித்து, விகாசம்பெறும் லோகங்கள். ஆனால் அவன் வசித்த முறையையும் விகாசம்பெறும் முறையையும் பற்றி வித்தியாசமான அபிப்பிராயங்கள் உள்ளன.

1. ஒரு அபிப்பிராயம்:—மனிதன் பூர்ணமான நிலைமை பெறும் வரை, அதாவது, பிரகிருதியை அதன் பூர்வ தமோ ரஜாம் சங்களை மாற்றி, சுத்த தேஜோமயமானவு மாக்கி, ஈசுவர புத்திரன் எனப்பெயர்பெறும் புருஷோத்தமன் அணியும் தகைமையுள்ளவுமான ஐகரசமாகச்செய்து அவ்விதம் ஜெயம் பெறும்வரை இந்த மூன்று லோகங்களிலும் திரும்பத் திரும்பப் பலமுறை தோன்றுவான், வருவான், ஜீவிப்பான்.

2. வேறு ஒரு அபிப்பிராயம்:—முதல் இரண்டு லோகங்களிலும் ஒருமுறை தான் தோன்றுவான். மூன்றுவதான சுவர்க்க லோகத்தில் முடிவற்ற காலம் வாழ்கிறான்.

இந்த அபிப்பிராயத்தின்படி மூன்று லோகம், மேன்மேலும் எவ்வித அபிவிருத்தியுமின்றி சுகம் அல்லது ஆநந்தம் முற்றுப்பெற்

---

* Revelations xxi—27.

றுள்ள ஸ்தானமாகும். அதாவது, பூமியில் அறிவு, குணம், சீலம், இவைகளில் ஏற்றத்தாழ்வான பல படிகளில் உள்ள மனிதர்கள், இறந்தமேல், அல்லது நியாயத் தீர்ப்பு நாளில்(Day of Judgment) அற்புதமாக, திடீரென்று பூர்ணம் பெறுவார்களாம், உயர்வற உயர் நலம் அடைவார்களாம், என்றுமே அவ்விதம் இருப்பார்களாம். இந்த அபிப்பிராயம் முன் கொண்டவர்களில் புத்திமான்களான சிலர் இப்போது அதினின்று நழுவி இருக்கிறார்கள், அதைத் தள்ளி விட்டார்கள். இரண்டாம் லோகத்தில் ஜீவன் நடைபெறுவதில் அதன்கண் அனுபவிக்கும் துக்கம், ஓய்வு, ஒழிவு, முடிவின்றி கொடுமையாய்ப் பெருகிக்கொண்டு என்றும் உள்ளது, என்பாரும் கூட, இப்போது வரவரக் குறைந்துவிட்டார்கள். இவ்வபிப்பிராயங்களை சரி என்று சாதிப்பார்களைப்பற்றிப் பிரஸ்தாபித்து மாத்திரம் விடுவோம். இந்த 1,500 வருஷங்களாக உபதேசிக்கப்பெற்ற உபதேசங்களின் பயனாக இவர்கள் தோன்றுவார்கள். அவர்கள்பால் குற்றம் ஏற்றவேண்டாம் என்றபடி.

3. மற்றொரு அபிப்பிராயம்:—பூமியில் மனிதன் ஒரு முறை தோன்றினாலும், இறந்தமேல், ஜீவன் சுகதுக்கங்களை பன்முறை அனுபவித்து அவைகளால் தூய்மை, பரிசுத்தம், பெற்று, மேன்மேலும் விருத்தி பெறுகிறான். முடிவில்லாக் காலம், உயர்நல மேறிக் கொண்டு போகும் நிலைமைகளை அடைகிறான். இந்த அபிப்பிராயங்கொள்ளுகிறவர்கள் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களும் சில ஸ்பிரிட்சுவலிஸ்ட்களும் (Spiritualists), சில பார்ஸீகர்களும், சில முகம்மதியர்களுமாம்.

எல்லாஹிந்துக்களும், பௌத்தர்களும், ஸ்பிரிட்சுவலிஸ்ட்களில் அநேகரும், சில கிறிஸ்தவர்களும், சில பார்ஸிக்களும், சில முகம்மதியர்களும், பிராசீன ஐதிகங்களில் நம்பிக்கை உள்ள ஹிப்ரு ஜாதியார்களும் (Hebrews), முதன்மையில் பிரஸ்தாபித்துள்ள அபிப்பிராயத்தைக் கொண்டவர்கள். அதாவது, மனிதன் இம்மூன்று லோகங்களிலும், பிறப்பு இறப்பு என்ற ஸம்ஸார சக்கரத்திற்குள்ளாக, பலமுறை திரும்பத் திரும்ப பிறக்கிறான், இறக்கிறான். மேன்மேலும் அறிவு, ஒழுக்கம் இவைகளில் உயர்நலம் பெறுகி

ருன். கடைமுறையில் இயமனை வெல்லுகிருன், இயமன் அதிகாரத்தை அதிக்கிரமிக்கிருன், பூர்ணம் பெறுகிருன். ஈசுவர புத்திரனுன ரிஷி, புத்தன், அல்லது கிறீஸ்து என்று சொல்லப்படும் உயர்ந்த ஸ்தானத்தை அடைகிருன். கடைசியில் இந்த மன்வந்தரம் ஒடுங்கி, பிரளயம் ஏற்படும் காலத்தில், ஈசுவரனின் ஹிருதயத்தில் இனி வரும் வேறு ஒரு மன்வந்தரத்தை நோக்கி எதிர்பார்க்கிறவனுக லயமடைகிருன்.

4. மனிதன் திரிலோகி, பூமியில் இருக்கும்பொழுதே இம்மூன்று லோகங்களுடன் அவன் சம்பந்தம் இடைபருது நிகழ்கின்றது. ஸ்தூல சரீரத்தில் அதன் கருவி கரணங்களின் சாதகத்தால்பூலோகத்தில் மனிதன் ஜீவிக்கிருன் அதாவது, கர்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள், மூளை வெள்ளை நரம்பு, அதாவது நாள சம்பிரதாயம் (nerveus system), இவைகளின் உதவியால் நினைக்கிருன். விரும்புகிருன், செய்கிருன், ஸ்தூல சரீர சம்பந்தமான பல தொழில்களை நடத்துகிருன். இச்சைகள், பாவங்கள் மூலமாய் புவர்லோகத்துடன் சம்பந்திக்கிருன். புவர்லோக சம்பந்தமான திரவியங்கள், அவன் ஸ்தூலசரீர அமைப்பில், ஊடும் பாவுமாய் பரவியிருக்கின்றன. அவனுடைய, பிரஞ்ஞான விஷயங்களின் மூலமாய், சுவர்க்கலோகத்துடன் சம்பந்தப்படுகிருன். இவைகளைப்பற்றி, தற்கால Psychology என்னும் நூலில், பிரஸ்தாபம் வருகிறதில், மனத்தின் உள்நோக்கான கதி ஒன்று உளது Subjective mind எனச் சொல்லப்படுகிறது. அதன் அபாரமான குப்தமான சக்திகளை இப்பேர்துதான், தற்காலமேனுட்டு சாஸ்திரிகள் வரவர ஆராய்ச்சி செய்து வருகின்ருர்கள். இந்த குப்தமான அந்தர்முகப்பட்ட மனோகதிதான், முன்னரே, மத கிரந்தங்களில் ஆத்மா வேறு, அதை நோக்க புருஷன் பிரஞ்ஞான ஆத்மா என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த புருஷன் பூமியில் இருக்கும் காலத்தில் ஜாகிரத, சொப்ந, சுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும் நடைபெறுகிருன்; இறந்தமேல், யாதொரு மாற்றம் இன்றி, புவர்லோகத்தில் வஸிக்கிருன், அதில் தன்னைப்பற்றிய கல்மஷங்கள் நீங்கி, புனிதமா

க்கப்பெற்று, ஆத்மாவுடன் (spirit) சுவர்க்கலோகத்திற்கு செல்லு கிறான். அதுவேஅவனுடைய சுவஸ்தானம், பிறந்த கிருகம். உண்மையான இல்லமாம்.

.5 பிரகிருத உலகவிகாச முறையின்படியில் இருக்கின்ற பெரும்பான்மையான மனிதர்கள் பிரஞ்ஞான ஆத்மா, என்று சொல்லப்படும் புருஷன் இருப்பதாக உணர்கின்றார்கள் இல்லை. ஆனால் எல்லாருக்குமே அவர்களுக்குத் தெரியாமல் இந்த புருஷன் மூளைபற்றிய உணர்வை (brain consciousness) ஏற்கின்றான். இந்த மூளைபற்றிய உணர்வு, புருஷனின் ஏகதேச சக்தியின் வெளித்தோற்றமாம். அநேகர், சிற்சில சமயங்களில், அதாவது, ஈசுவர ஆராதனையிலும், தியானத்திலும், இந்த புருஷன் இருக்கிறான் என்ற உணர்வு பெறுகின்றார்கள். சில வேளைகளில் முக்கியமாய்ப்பக்தி அல்லது ஞானமுறையில மனம் வழிபட்டு சொக்சிநிற்றலில் (cases of conversion), மூளையின் உணர்வைத்தள்ளிக் கீழ்ப்படுத்துகிறதுண்டு. இதன் மூலமாய்(பிரஞ்ஞான ஆத்மா என்ற புருஷன் soul consciousness மூலமாய்) தீர்க்க தர்சிகள் ஞானாசிரியர்கள், மதங்களில் பிரஸ்திக்கப்படுகின்ற ஞான்சிரேஷ்டர்கள், இவர்களிடம் ஆன்மா (spirit) வேலைசெய்கிறான், பிரகாசிக்கிறான். அருள்பெற்ற கலைஞர், பேரறிவாளர் இவர்களின் கண், மூளை உணர்வுக்குக்கீழ்ப்பட்டுப், பிரஞ்ஞாபுருஷன் பிரகாசிக்கின்றான். மரணத்துக்கு முன்னும் பின்னும் உள்ள புருஷனின் கீழான அனுபவங்கள், புவர்லோகத்துடன் சம்பந்தப்படுகின்றன. ஆன்ம தர்சனம் பெற்றுப்பிரகாசிக்கின்ற புருஷனின் மேலான அனுபவங்கள் சுவர்க்கலோகத்துடன் சம்பந்தம் பெறுகின்றன; இந்த ஸ்தூலசரீரத்தின் பந்தத்திற்குட்பட்டவனாய் பூமியின்கண் இருப்பவனாயினும், அந்த லோகவாசியாகவே நடைபெறுகிறான். இதை மேற்கண்ட ஞானிகளிடம் பார்க்கலாம். இத்தன்மையான சுவர்க்கலோக அனுபவம் மற்ற சாதாரண ஜனங்களுக்கு, இறந்தமேல் புனிதம்பெற்ற புருஷனுக்கு சுவர்க்கலோகம் பிரவேசிக்கிற காலத்தில், உண்டாகும்.

6. பூலோகம்:— இது மனிதன் ஜாகிருதா அவஸ்தையின் செயல் நிகழ்கிறதற்கு உரித்தான க்ஷேத்ரம். மனிதன் நன்மை

தீமை என்ற விதை விதைக்கின்றான், கர்மங்கள் செய்கிறான். பின்பு வருங்காலத்தில் அவைகள் பலன் தரும். மனிதனின் பிராகிருத கோசங்களில், அன்னமய கோசமான ஸ்தூலசரீரம் இப்போது, பூர்ணமாய் கருவி கரணங்கள் வியக்தமாக அமையப்பெற்று நன்றாய் ஒழுங்குப்படுத்தப் பெற்றிருக்கின்றது. இச்சரீரத்தினால் எல்லாத் தொழில்களையும் நடத்துகிறான். தீமை பற்றிய நினைப்பு, இச்சை, செயல், இவை எல்லாம், நீதிமுறைக்கு விருத்தமாக இருக்கின்றமையால், துக்கத்தின் வித்தாக அமைகின்றன அதன் பலனை இவ்வுலகத்திலும் புவர்லோகத்திலும் அவன் அனுபவிப்பான். ஆசை, ஆசையைப்பற்றிய எண்ணங்கள், அவைகளின் நுகர்ச்சியால் உண்டாகும் விஷய சுகங்கள், இயல்பாக புவர்லோக சம்பந்தமானவைகள். அதனால் மரணத்திற்குப் பின்பு அந்த லோகத்தில்தான் அவைகள் பலனுக்கு வரும்.

7. கீழான ஆசைகள்:—அவைகள் உணர்வுபெறப்பெற, விருத்தியாகின்றன; அதன் பயனாக, இவ்வுலகத்தில் ஸ்தூலசரீரத்தளர்ச்சியும், சிரழிவும்உண்டாகின்றன. அதன்விபரீத பயனாக, மூளை,வெள்ளை நரம்பின் கட்டுகள் கெட்டுப்போய் நொந்து கெடுகிறான். இவ்வாசைகளின் வசமாகி, அறிவு கெட்ட மாந்தர் புவர்லோகத்தில், படும் துன்பமும் துயரமும் துக்கமும் மிகவும் கொடுமையானவை; மரணத்தினால், ஸ்தூல சரீரம் கழலுகிறது, போய்விடுகிறது. அது தான், விஷய நுகர்ச்சிக்கு சாதனமானது; அது ஒழியவே, ஆசைகளை அனுபவிக்கும் கருவி, போய்விட்டது. புருஷனிடம் ஆசைகளின் தாகம் மாத்திரம் தங்கி இருக்கிறது. இப் புருஷனோ, ஆசைகளின் வசமானவன். ஆசைகளை அனுபவிக்க ஸ்தூலசரீர ஹேது இல்லாமல், புருஷன் தத்தளிக்கிறான், தபிக்கிறான். அதினால் வருத்தமுறுகிறான். ஆசைகளின் தாகம் இவனைப் புண்ணாக்குகிறது. இவைதான் புவர்லோகத்தில் புருஷன் அனுபவிக்கும் யமவாதனை. மேலான ஆசைகளும் (சுத்தமான அன்பு, காருண்ணியம், கலைக்ஞானம் முதலியன) ஊட்டம் பெறப்பெற விர்த்தியடைகின்றவைதான்; ஆனால் அவை புருஷனைப்பற்றியவை, ஸ்தூலசரீரம் பற்றியவை அல்ல. மரணம் அவைகளைப்பாதிக்காது. புவர்லோ

கத்திலும் சுவர்லோகத்திலும் சுகம் அனுபவிக்க அவை காரணமாகின்றன. சுருங்கச் சொல்லுமிடத்து, பூமியில் புருஷன் ஸ்தூல சரீரத்தின் வசமானால், புவர்லோகத்தில் அவனுக்கு துக்கப்பிராப்தியாம். பூமியில் புருஷன் ஸ்தூலசரீரத்தின்வசமாகாமல் அதைவசப்படுத்துவானாயின், சுகிர்த பிராப்தியாம், அதாவது சாந்த நிலையும் ஆநந்த அனுபவமும் அவன் பெறுவான்.

8 புவர்லோகம்:—முன்பாராவில் கடைசியில் சொல்லியபடி, புவர்லோக விஷயத்தைப்பற்றிய உண்மை எல்லாமதங்களிலும் உபதேசம் பெறினும், அந்தலோகத்தைப்பற்றிய விவரணங்கள் மற்றைய மதங்களில் வித்தியாசமாகச் சொல்லப்படுகின்றன. ஹிந்துமதஸம்பிரதாயத்தில், புவர்லோகம் இரண்டாகப்பிரிகின்றது. அவை பிதிர்லோகம், பிரேதலோகம், என்பனவாம். பிரேதலோகம் துக்கத்தின் பலதுறைகளான, பலபடிகளாயுள்ள நரகங்களாகப் பிரிகின்றது. பௌத்தமதத்திலும் இவ்வாறேஉள்ளது. ஆனால் இந்தலோகவாசமும், அனுபவமும், ஸ்திரமன்று, சொற்பகாலந்தான்நிகழ்வது; இந்தலோகத்தில் புருஷன் பரிசுத்தம் பெறுகிறான். பின்பு, சுவர்க்கலோகம் அடைகிறான். முன் பூமியில் தான்நடைபெற்ற வாழ்வின் புண்ணியத்தின்ஏற்றத் தாழ்வுகளுக்குதக்கபடி இந்தசுவர்லோகத்தின் அனுபவம் முறையே நீண்டகாலம் குறுகின காலம் பற்றியதாக முடியும் பின்பு, அப்புண்ணியத்தில் பலம் குறைய, பூமிக்கு திரும்புகிறான். சில கிறீஸ்துவர்கள் அபிப்பிராயத்தில், பூர்ணசுகிர்தமுள்ள சுவர்க்கம் அதில் பிரவேசிக்குமுன் paradise என்ற ஒரு ஆநந்த நிலையும், பூர்ண துக்கமுள்ள நரகம் அதில் பிரவேசிக்குமுன், துக்ககரமான ஒரு நிலையும்உண்டு என்பதாம். பின்னும்சிலர், விவரமாகச் சொல்லாமல், இடைநடுவிலுள்ள புவர்லோகத்தைப்பற்றிய பிரஸ்தாபத்தைத்தவிர்க்கிறார்கள். காதலிக்ஸ் கிறீஸ்துவர்கள், (ரோமன், கிரேக், ஆங்கில வகுப்பினர்கள்) பிராசீன சம்பிரதாயத்தை அனுசரித்து, சுத்தமானவர்கள் paradise என்ற ஆனந்த நிலையை முதலில் அடைகிறார்களென்றும், சாதாரண ஜனங்கள் purgatory என்ற புவர்லோகத்தில் கொஞ்சகாலம்தங்கியிருந்து, பின்னர் paradise என்றஆனந்த நிலையைப் பெறுவார்கள், என்றும், மிகவும் அபூர்வமாய் சொற்ப

மதங்களுக்குள் சகோதர தர்மம் நிகழவேண்டுமென்பது. உறுமானவர்கள், அதாவது மகா ஞானிகள் மாத்திரம் சுவர்க்கம் உடனே பெறுகிறார்களென்றும், எல்லாரும் கடைமுறையில் சுவர்க்கம் பெறுகிறார்களென்றும் அபிப்பிராயப்படுகின்றார்கள். முன்சொல்லியபடி சில கிறிஸ்துவர்களும் முகம்மதியரில் சிலரும், என்றுமுள்ள நரகப் பிராப்தி உண்டென்று சாதிக்கிறார்கள்.

9. சுவர்க்கலோகம்:—கீழான பாவங்கள் ஆசைகள் இந்த லோகத்துடன் சம்பந்தம்பெறா. இது, பிரஞ்ஞானமயமான லோகம். பூமியில் விதைத்த நல்ல எண்ணம், நல்ல சங்கற்பம், நல்ல பாவம் என்றவைகளின் பலன் இந்த சுவர்க்கலோகத்தில் உண்டாகும், அநுபவிக்கப்படும். சிதறாததும் மாசற்றதுமான ஆனந்த நிலையிது வெளிநின்றுபார்க்குங்காலத்து பலதிறத்தினதாகத் தோன்றினும், அநுபவிக்கிற புருஷனுக்கு அவனுடைய தகைமைக்குத்தக்கபடி நிறைவாகவேயிருக்கும். மேலும் உலகவிகாசமுறையில் ஜன்மாந்தரம் உண்டு என்பார்க்கும் இல்லை யென்பார்க்கும், இந்த சுவர்க்கலோக விஷயத்தில் சில அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. ஜன்மாந்தரம் உண்டென்பார் சொல்லுவது யாதெனில், பூமியில் விதைக்கும் விதையின் பலனை சுவர்க்கத்தில் அநுபவிக்கிறதுமல்லாமல், அவ்விதைகளான நன்முயற்சிகள், நன்னோக்கங்கள், நல்ல பாவங்கள் நல்ல சங்கற்பங்கள் ஸ்வர்க்கலோகத்தில் புருஷனின் சீலமாகவும் யோக்கியதையாகவும் மாறுகின்றன; அவைகள் ஒருங்கு சேர்ந்து பின்னால் பூலோகத்தில் புருஷன் சரீரம் எடுக்குங்காலத்தில் இயற்கையான ஸ்வபாவமாக அமைகின்றன என்பதாம். இந்த அபிப்பிராயத்தின்படிஜீவவிகாசமுறையில் ஸ்வர்க்கலோகம் முக்கியமானதாக ஏற்படுகிறது. ஜன்மாந்தரம் இல்லை யென்கிறவர்களுடைய அபிப்பிராயங்கள் வியக்தமாய் வெளிப்படாமையால், அவைகளை சங்கிரகித்து இவ்விடத்தில் சொல்லமுடியவில்லை. ஆயினும் சுவர்க்கம் ஒரேநிலையாயுள்ளது, என்றும் மாறாதது என்று, சொல்லுவார் நீங்கலாக, மற்றவர்கள் இறந்தமேல் புருஷன் பல லோகங்களில் பலவாறாகச் சஞ்சரித்து மேன்மேல் விர்த்திபெறுகிறான் என்று சொல்லுகிறார்கள் எல்லாமதங்களும் உயர் நலம் அமைந்த அடியில் வரும் அபிப்பிராயத்தை ஒரே மாதிரியாக உபதேசிக்கின்றன, அதாவது மனிதன் நித்யன், ஈச்வராம்சம் பொருந்தியவன்; அவனுடைய தர்மஒழுக்கம் என்னவெனறால் அன்புபாராட்டலும் ஜீவகாருண்ணியம் சாதித்தலும், அகன்ற ஆழ்ந்த அறிவு பெறுதலும், யாவருக்கும் என்றும் உதவிபுரிதலும் நலம்பட வாழ்தலுமாம்.

# பிரஹ்மஞான சபையும் சகோதரபாவமும்.

---:o:---

1. சகோதரபாவமென்பது பிரபஞ்சத்தில் இயற்கையாக நிகழும் உண்மை. அதுஇல்லை என்பார் அறியாதார். கண்மூடிக்கொண்டு உலக இயல்பை உணரார். இந்த சகோதரபாவம் இன்னதென்று அறியுமுன், அது இன்னவை அல்ல என்பதைஅறிந்துகொளல் நலம். எல்லாரும் சமம், எல்லாம் சமம் என்பதன்று. எல்லா விஷயங்களிலும் சமமான தகைமையுள்ளவர்களும் உள்ள வஸ்துக்களும் உலகில் இல்லை. வயக்கிரமத்திலும், பலத்திலும், புத்திநுட்பத்திலும், அறியும் திறத்திலும், எல்லாரும், எல்லாம் பலபடிகளில் உள்ளவர்களே, உள்ளவைகளேயாம்.

2. சகோதரபாவம் என்றால் பொது நலம், ஜன சமூகத்தின் பொது நலம் கருதல்; பலஜனங்களின் தனித்தனியான ஸ்வார்த்தங்களின் அதாவது சுயநலங்களின் தொகுதியன்று. ஒரு குடும்பம் தனமுள்ளதாயின் அக்குடும்பத்தின் ஒவ்வொருவருக்கும் அத்தனத்தின் பிரயோஜனம் உண்டு. ஒரு குடும்பம் ஏழையாயிருப்பின் அக்குடும்பத்தின் ஒவ்வொருவரும் வறுமையினால் வருத்தமுறுவர். இதனால் நலமும் வருத்தமும் எல்லாருக்கும் பொதுவென ஏற்படும். ஆனால், அந்தந்தக் குடும்பத்தின் சகோதரர்கள் அவர் அவர் பாடு என்று வேறுவேறான சுகதுக்கங்களும் உண்டு. 6 வயதுள்ள பாலனுக்கும் 14 வயதுள்ள பையனுக்கும் பொதுவான விஷயம் என்ன இருத்தல் கூடும்? அவன் அவன், அவன் அவன் வயதுள்ள இளைஞர்களுடனே சேருவான். அவனுக்கும் இவ்விளைஞர்களுக்கும் உள்ள பொதுவான விஷயங்கள் அவனுக்கு அவனுடைய சகோதரனுக்கும் உள்ளவைகளைவிட அதிகமாகவே இருப்பவையாகும். உலகவியாபாரங்களில் புகுந்து நடைபெறுகின்ற 25 வயதுள்ள ஒருவன் பள்ளிக்கூடத்தில்வாசிக்கும் தன்னுடைய தம்பியின் கல்விப்பயிற்சியின் கவலையையும், வெகுமதி பெறவேண்டுமென்ற ஊக்கத்தையும்பற்றி நினையான். அவைகளில் அவன் புத்தி செல்லாது. மூத்தவன் கவலைகளும் மனோபாவங்களும், இளையவன் கவலைகளும் மனோபாவங்களும் வேறு வேறாய் நிகழ்கின்றன.

3. அவ்விருவரும் சகோதரர்களாகையால், அவரவர் நினைப்பும், கவலையும், விருப்பும், வெறுப்பும் ஒரே மாதிரியானவை என்று எண்ணுதல் கூடாது. அவ்விதம் இருத்தலும் முடியாது. உலகத்தின்

க்ஷேமத்தை உத்தேசிக்க அவ்விதம் இருத்தலும் நலமன்று. அவன் அவன் வயதுக்கு ஏற்ப உரிமைகளும் உத்தரவாதங்களும் வேறுபடுகின்றன. மனிதவர்க்கம் மேன்மேலும் அபிவிர்த்தியாகி விகாசம் பெற வேண்டுமானல், ஈசுவரனல் ஏற்பட்ட அவன் அவன் நிலைக்குரிய உத்தரவாதத்தை நேர்மையாக பக்திவிசுவாசத்துடன், கொண்டு செலுத்த முயலவேண்டும். இதுதான் சாஸ்திரத்தின் கருத்து, இதனல், பூர்வ கர்மானுசாரமாய் அவன் அவன் பிறந்த ஸ்தானத்திலேயே என்றும் இருக்கவேண்டுமென்பதன்று. சத்தியமான நெறியில் நின்று பிறருக்குத் துன்பம் செய்யாமலும் சத்கர்மங்கள் கருதியும் அவன் மேலான பதவிக்குப்போகுதலில் யாதொரு ஆக்ஷேபணையும் இன்றும். அதில் சர்வ சுதந்தரமுண்டு. ஆனல் எந்த நிலைமை ஏற்பட்டாலும் அந்நிலைமைக்குரிய தர்மங்களை அவன் செய்யற்பாலன். குழந்தை நேரானபடி வளர்கின்றுன், அவன் வயதுக்குரிய தர்மங்களை அவன் செய்வான், செய்யவேண்டுவது. மூத்தவன் தர்மங்கள் அவனுக்கில்லை. ஒவ்வொரு வயது பருவத்துக்கும் அததற்கு உற்ற தர்மங்களும் கடமைகளும் உண்டு. பாலன் கல்வி கற்கவேண்டும், பணிவிடைசெய்யவேண்டும். மூத்தவன் அவனை நல்வழியில்நடத்த வேண்டும்; அவனைக்காப்பாற்றவேண்டும், எல்லாரும் ஒருவரோடு ஒருவர் அன்பும் ஆதரவுமாக இருத்தல் வேண்டும். எல்லாரும் ஓரே மனித குலத்தைச் சேர்ந்தோம் என்ற பொதுக்கருத்தை அனுஷ்டானத்தில் கொண்டுவரும்படி முயலவேண்டும்.

> "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்,
> நன்றே நினைமின்." என்றுர் திருமூலநாயனர்.

அந்த உயர்ந்த மனித குலத்தின் அங்கத்தினராய் ஒவ்வொருவனும் அவன் அவனுக்கு ஏற்பட்ட தர்மங்களையும் உத்தரவாதங்களையும் சிரத்தையுடன் கொண்டுசெலுத்த முயலுவானகில், அதனல் மற்றவர்களான சகோதரர்களுக்கு உதவி புரிந்தவனுவான். பிறர் காரியத்தில் பிரவேசித்ததினல் அன்று.

4. பிரஹ்மஞானசபையில் சகோதரத்துவம் என்ற தர்மம் உண்மையாக நடைபெறவேண்டியது. நமக்குள் நெருங்கிய ஐக்கியமும், அந்நியோந்நியமும், கூட்டுறவும், ஒருமையான உணர்வும்

இருக்கற் பாலது. நம்முடைய சபையின் அங்கத்தினர்கள் அவர் அவர் மனக்கருத்துக்களை அதிகமாகப் பாராட்டாமல் மறந்து, பிறர் நலங்களை முக்கியமாக எண்ணுவார்களாகில், மேற்கண்டபடி ஒருமை உணர்வும் ஐக்கியமும் உண்டாகும். இச்சபையின் ஹிருதயமானது புத்தி பூமி (Buddhic plane). அதில் மஹாத்மாக்கள் வேலைசெய்யும்படியாக, சரியானபடியாக நாம் இருக்கற்பாலேம், அத்துடன் அவர்கள் சம்பந்தம் ஏற்படும். அச்சம்பந்தமே, ஒரு பெருவாய்க்காலாக அமையும். அவ்வாய்க்கால்வழியாய் மஹாத்மாக்களின் ஞான அருள் வெள்ளம் சாதாரணமாய் நமக்கு வருவதாகும். அத்தன்மையான வாய்க்கால் சரியானபடியும்நேர்மையாகவும் அமைதல் சபையின் அங்கத்தினர்களின் உண்மையானபக்தியையும் விசுவாசத்தையும், மன நேர்மையையும் பொறுத்ததாக இருக்கிறது. பிரகிருத ஸ்திதியில், அவ்வாய்க்கால் பூர்த்திபெறவில்லை. ஏனெனில், அங்கத்தினர்கள், தனித்தனியாக, சுயநயம் அதிகமாகவும் பொதுநலம் குறைவாகவும் கருதிப்பாராட்டுகின்றார்கள். ஒரு சுவர்நேராகக்கட்டப்பெறவேண்டுமானல், எல்லாக் கற்களும், அததன் இடத்தில் சரியாக அமையவேண்டும்: அப்படிக்கின்றி ஒரு கல் நேராகவும், மற்றது கோணலாகவும் இருக்குமாயின், சுவரில் மேடுபள்ளம் ஏற்படும். சுவரும்பூர்த்தியாக நேர்பட அமையாது. நாமே பிரபஞ்சத்தில் விகாசம் என்ற அகன்ற பெரிய விவஸ்தையின் (Scheme) ஒரு சிறு பாகமாக இருக்கின்றோம். அதை ஒருபெரியயந்திரமாக உவமிப்போமாகில், நாம் அதில் ஒருசக்கரமாவோம், நம்முடைய பாகத்திற்கு ஏற்பட்ட தர்மத்தையும் உத்தரவாதத்தையும், சரியாக நடத்த நாம் சித்தம் செய்துகொள்ளல்வேண்டும். அதற்குரிய தகைமையைப்பெறல் வேண்டும் அப்படிச் செய்துகொள்ளுவோமாகில், உலகம் என்ற நாடகத்தில் பெரியஸ்தானம் பெறுதலுக்குரிய யோக்கிதை நமக்கு உண்டாகாமற்போனுலும், நமக்கு ஏற்பட்ட தர்மத்தை மாத்திரம், அது அற்பமேனும், நாம் நன்ருய்ச் செய்துமுடித்தவராவோம். பெரிய விவஸ்தையின் நமக்குரிய ஒரு சிறு பாகத்தை நேர்மையாகவும் கவுரவமாகவும் செய்தவராவோம்.

5. பிரஹ்மஞான சபையை ஸ்தாபித்து நடத்திவருகின்ற மஹாத்மாக்கள் இருவராவர். அவர்கள் 1 இந்திய மஹரிஷிகளே

ஹிமயமலையின் வடசாரலில், ஷம்பலா என்னும் க்ஷேத்திரத்தில் இருக்கின்றார்கள்.

ஆரியர்கள் உலகவிகாசமுறையில், 5-ம் மனிதவர்க்கத்தினராவர். வஃவஜ நா: என்று ஸமஸ்கிருத சாஸ்திரங்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்றார்கள். ஆறும்மனிதவர்க்கத்தினர் இனிப்பிறக்கப்போகின்றார்கள். அவ்வகுப்பை ஸ்தாபனம் செய்வதற்காகவே, இவ்விரண்டு மஹரிஷிகளும் முயற்சிக்கின்றார்கள். இனி 700 வருஷங்களுக்குப்பின்னர் அம்முயற்சி தீவிரமாக நிகழும், ஆனால் அந்நோக்கமாக, இப்போதே ஆரம்பித்திருக்கின்றார்கள். அவ்வேலையில் தமக்கு உதவி செய்யத் தகைமையுள்ளாரைத் தெரிந்து எடுத்துக்கொண்டு வருகின்றார்கள். இதைவிட சமீபத்தில் நடத்த வேண்டிய வேலை ஒன்று உளது. இப்போது ஆரியரின் 5-ம் உள்வகுப்பினர் இது வரை உலக விகாச முறையில் வெளிவந்திருக்கிறார்கள். அவர்கள் முக்கியமாய் மேனாட்டில், இருக்கின்ற அங்கிலோ சாக்ஸன் ஜாதியாரும் ஜர்மானிய ஜாதியாருமாவார். இனி ஆரியரின் 6-ம் உள்வகுப்புக்குரிய ஜாதியார் வெளிவர வேண்டும். அது சமீபகாலத்தில் பிரகாசமாக வெளிவரும். வட அமெரிக்காவில், அஜ்ஜாதியார் தோன்ற ஆரம்பித்திருக்கின்றார்கள். ஏற்கனவே, அது சம்பந்தமான பிரயத்தனங்களின் வெளிச்சின்னங்கள் காணப்படுகின்றன. பலஜாதியார்கள் கொள்வினை கொடுப்பனை முறையால் சம்பந்தப்படுகின்றார்கள். இந்த பிரயத்தனங்களில், பிரஹ்மஞான சபையாரும் சிலதொழில் செய்யவேண்டுவராவர். குழந்தையின் இளமைப்பருவத்தில், சுற்றம் (environment) நலம் தரும் தன்மையதாக இருக்கற்பாலது என்று நாம் நன்கு அறிவோம். அத்தன்மையாகவே, ஒரு நூதன மனிதவர்க்கத்தின் இளமைப் பருவத்தில் சுற்றம் உயர்நலம் அமைந்ததாக இருத்தல் வேண்டும். இனி வரப்போகும் நூதன ஜாதிவர்க்கம் நேர்மையாக ஆரம்பிக்கும்படியாய் நம்முயற்சி அனுகூலமாகில், பெரிய லாபம் அடைந்தவராவோம். அமெரிக்கா இப்போது நமக்கு எவ்வளவோ தூரத்தில் இருந்தாலும், இப்போதுகூட, நாம் இஷ்டப்பட்டால், அத்தேசத்திற்கு, அநேக பெரிய சாதகம் நாம் செய்தல் இயலும். இஃது அத்தேசத்திற்கு நல்ல முக்கியமான தருணம். நம்முபசாரம் மிகப்பயன்படும்.

6. இப்பிரயத்தனங்களில், நாம் கவனிக்கவேண்டுவது ஒன்று என்னவென்றால், டியுடானிக் ஜாதியாரியின்பல உள்வகுப்புக்களை ஒன்றுபடும்படி செய்தலாம். அவர்கள் ஆரியவர்க்கத்தில், 5-ம் உள்வகுப்பினர் ஆவர். ஆங்கிலர் (English), ஸ்காண்டிநேவியர், டச்சுக்காரர், ஜர்மானியர், பிரான்சு இத்தாலி தேசங்களில்உள்ள நார்மன்ஸ் என்று சொல்லப்பட்டவர், ஐரோப்பா தென்னாடுகளில் உள்ள சிலர்கள், இவர்கள் மேற்படி 5-ம் உள்வகுப்பினர்களாவார்கள். முன் பிரஸ்தாபித்த விவஸ்தையின் பிரயத்தனங்களில், இச்சாதியார்கள் ஒருவரோடொருவர் அதிக அந்நியோந்நியம் பாராட்டல் முக்கியமானது. இங்கிலாந்து தேசத்திற்கும், அமெரிக்கா தேசத்திற்கும் இந்த விஷயத்தில் ஏற்கனவே சிநேகமுறைமை ஏற்பட்டுக்கொண்டுவருகின்றது. இங்கிலாந்துக்கும், ஜர்மனி தேசத்திற்கும், அவ்வளவு நேர்மை இல்லை. ஜர்மனி தேசம் தான் தனிமையாக இருத்தல், தனக்கு நலமெனக்கருதுகின்றது. இனி இத்தேசமும் அவைகளுடன் சேருமென்று நன்னம்பிக்கை கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

7. இவ்விதம் இஜ்ஜாதியார் அந்நியோந்நிய சம்பந்தம் பெறுவார்களாகில், இனி வரப்போகின்ற அவதாரபுருஷன் உதயமாவதற்கு அனுகூலமாக இருக்கும். அவர்தான் மைத்திரேயர் என்ற மஹாப்பிரபு. அவர் திரும்பவும் அவதரிக்கப்போகின்றார். இனி வரப்போகின்ற உயர்நலம் அமர்ந்த லோககுருவாவர். உலகத்தில் நூதன மதத்தை ஸ்தாபிக்கப்போகின்றார். இந்த நூதன மதஉபதேசம் என்னவென்றால், இப்போது நடைபெறுகின்ற மதங்களை ஒன்றுபடும்படி செய்தலாகும். இந்த உபதேசம் அதிக சமீபகாலத்தில் நிகழக்கூடியது. இம்மதங்களை விட இனி ஸ்தாபிக்கப்பெறும் மதமானது அதிக விசாலமான ஆதாரமுடையதாகும். அதிக தீர்க்ககாலம் பரிசுத்தமாக உலகத்தில் நிகழ்வதாகும். இத்தன்மையாக மதங்களுக்குள் சிநேக தர்மம் உண்டாவதற்கு முன்னர், உலகத்தில் சண்டை, போராட்டம் என்ற பேயை ஓட்டவேண்டும். அது உலகத்தை ஒரே அமுக்காய் அமுத்திக்கொண்டிருக்கிறது.

**C. W. L.** [இன்னும் வரும்] ப. நா.

# சங்கீதம்.

(முதற்தொகுதியின் 160-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி நம்முடைய முன்னவர்கள் சங்கீதத்தை அமைத்திருக்கும் கணித முறையின் . (Mathematical guide) நியாயத்தை ஆராய்வோம்.

நம்மவர் கொள்கைப்படி பரமகாரணமாகிய பரப்பிர்மத்தினிடமிருந்து முதலில் ஆகாசமும் ஆகாசத்தினிடமிருந்து வாயுவும் உண்டாயின. ஒவ்வொரு(Element) பூதத்திற்கும் ஒருகுணம் இடைவிட்டுப்பிரியாதது. ஆகாசத்தின்குணம் சப்தம். வாயுவின்குணம் ஸ்பர்சம், சப்தத்தை வாயுவின் குணமாகிய ஸ்பர்சமானது (சுஹிவ்ருத்தி) வெளியாகும்படிக்கும் பரவும்படிக்கும் செய்கிறது. காரியமானது காரணத்தையும் காரணத்தின் குணத்தையும் ஒருவாறு மறைக்கும் என்கிற நியாயப்படி, ஆகாசத்தின் குணமாகிய சப்தத்தை ஆகாசத்தின் பரம்பரா காரியங்களாகிய அக்கினியும், ஜலமும், மண்ணும், அவைகளால் அமைந்த பூதபிரபஞ்சமும் மறைத்துவிட்டன. ஆகாசமும் வாயுவும் அமூர்த்த திரவியமெனவும் அக்கினியும், ஜலமும் மண்ணும் மூர்த்ததிரவியமெனவும், அழைக்கப்படுகின்றன. அமூர்த்தமாகிய வாயுவானது (elastic) அசைத்தால் அசைந்து மறுபடியும் பூர்வநிலையில் அமையக்கூடியதாகையால், அது சப்தத்தை மறைக்கவில்லை. மூர்த்தமாகிய மற்ற மூன்றுபூதங்கள் அந்த சுபாவமுள்ளவைகளல்ல அவைகளால் அமைந்த பிரபஞ்சமானது சப்தத்தை மறைத்துவிட்டது. (அப்படிமறைக்கப்பட்ட சப்தத்தை வாயுவின் குணமாகிய ஸ்பர்சமானது சுஹிவ்ருத்தமாகும்படி அதாவது வெளியாகிப் பரவும்படி செய்கின்றது. அவ்விதமாகவே நவீனசாஸ்திர முறைப்படிக்கும் சப்திக்கிற பொருளிலிருந்து வெளிக்கிளம்புகின்ற துவனியின் நடுக்கம் அல்லது கம்பநம் (Vibration) ஆனது மனுஷியனுடைய காதில் படுவதற்கு வேறொரு காரணத்தை அபேக்ஷிக்கிறது. அதாவது வாயு அல்லது வேறு (elastic) பொருளின்மூலமாக அந்த துவனிக்கும் செவித்துவாரத்திற்கும் The drum of the ear) ஸ்பர்சமாகிய சம்பந்தம் உண்டானால்தான், சப்தமானது அனுபவிக்கப்படுகிறது.

புவனசிருஷ்டிக்கிரமத்தில் ஐந்து பூதங்களையும் பஞ்சீகரணம் செய்து, அதாவது ஒருமுறையாகக்கலந்து ஸ்தூலபிரபஞ்சம் சிருஷ்

டிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் முறையாக, ஐந்துபூதங்களுக்குள்ளும் ஊடுருவிச்செல்லுகின்ற சப்தத்தை ஸ்வரங்களாக வேறுபடுத்தி, அப்படி அமையும் பல ஸ்வரங்களை ஒரு முறையாகக் கலந்து பஞ்சிகரணப்படுத்தி, காதில்விழும்படி செய்யும் முறைதான் ஸங்கீதமாகின்றது. முதற்காரியமாகிய ஆகாசத்தை கௌணமாக பிர்ம்மமென்று சொல்லப்படும் வண்ணம், ஆகாசத்தின்குணமாகிய சப்தத்தை, ஹடயோகவாதிகள் நாதப்பிர்ம்மமென்று அழைக்கிறார்கள். அதைத்தான் நம்மவர்கள் பிரணவமென்று "ஓம்" காரத்தினால் வற்புறுத்திச்சொல்லுகின்றார்கள். பிரணவத்தைப் பிரபஞ்ச சிருஷ்டியில் ஒருமுறையாகக்காரணமென்று விவரிக்கப்படுவதுபோல சப்தபிரபஞ்சமாகிய ஸங்கீதத்திற்கு அப்பிரணவத்தையே காயகர்கள் முதற்காரணமாகக் கொண்டிருக்கிறார்கள். எப்படியெனில் 'ஓம் காரத்திற்கு அ + உ + ம் என்று மூன்று அவயவங்கள் சொல்லப்படும் முறையாகச் சப்தத்திற்கும் மூன்று ஸ்வரூபங்கள் சொல்லப்படுகின்றன. அதாவது மத்தியில் வெறுமை அல்லது குழாயான ஒரு பொருளை (உதாரணமாக ஒரு பெட்டகம் அல்லது தோலாலமைந்த பை அல்லது துருத்தி) திறக்கும்பொழுது உண்டாகும் சப்தம் ஒன்று; அதைக்குறுக்கும்பொழுது உண்டாகும் சப்தமொன்று; பின்னர் அதை மூடும்பொழுது உண்டாகும் சப்தமொன்று. ஆக மூன்று சப்தமாகிய ஸ்வரூபங்களுக்குள் நாம் கேட்கும் எல்லாச்சப்தங்களும் அடங்குகின்றன. அந்த சப்தங்களை முறையே சங்கேதமாக அ, உ, ம், எனக்குறிப்பாக அழைக்கின்றார்கள். அம்முறையே வாயைத்திறக்கும்பொழுது 'அ' என்ற சப்தமும், வாயின் இதழ்களைக் குறுக்கும்பொழுது 'உ' என்னும் சப்தமும், வாயை மூடும்பொழுது, 'ம்' என்னும் சப்தமும் உண்டாவதை அறிக. இந்த சப்தமானது மனுஷ்யனுடைய சரீரத்தின் ஊர்த்துவ பாகத்திற்குள் அமைந்திருக்கும் நாவு, பல், அண்ணம், மூக்கு, கண்டம், மார்பு இவைகளான ஆறு கருவிகளின் வழியாக பிராணவாயுவு செல்லும்பொழுது உண்டாவதால் அதற்கு "ஷட்ஜம்" என்று பெயர். அப்பெயருக்கு "ஆறினால் உண்டாவது" என்பது பொருள். அந்த "ஷட்ஜ" த்தில் பல வேறுபாடுகள் உள்ளடங்கி இருப்பதால் அதற்கு "பிரசபம்" என்றும் சொல்லப்படும். [இன்னும் வரும்]

பி. எஸ். சுப்பிரமணிய அய்யர்.

# புத்தக வரவு.

இயேசு, கிறிஸ்து, என்பவர்களின் சரிதம், அதன் உண்மை:- இஃது ஒரு அருமையான சிறு துண்டுப்பத்திரிகை. இயேசு என்பாரின் ஜனனமும் கிறீஸ்து என்பாரின் அவதாரமும் வேறு என்றும், அவை இரண்டின் சம்பந்தத்தின் தத்துவம் இன்னதென்றும் எளிய இனிய தமிழ் நடையில் இது வெளியிடுகின்றது. 12 பக்கங்களில், உயர்ந்த விஷயங்களும் உண்மைகளும் வெளிவந்திருக்கின்றன. இது யாவரும், முக்கியமாக நமது கிறீஸ்து சகோதரர்கள் படிக்கவேண்டியது. இது மதுரை பிரஹ்மஞானமந்திரத்தின் பிரசுரம். 100 காப்பிகளின் விலை ரூ. 2—8—0. தனிக்காப்பியின் விலை 6 பைசா. தபால் சார்சு பிரத்தியேகம். வேண்டுவோர் ஷை சபையின் பிரஸிடெண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விரோதிகிருது௵த்திய சென்னை விவசாய பஞ்சாங்கம்:—இது சர்க்காரால் செய்யப்பெற்ற பிரசுரம். பஞ்சாங்க விஷயங்களுடன் விவசாயிகளுக்கு உபயோகமான விஷயங்கள் பல இடங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா ஒன்று. இத்தகைய புத்தகங்களும் துண்டுப்பத்திரிகைகளும் கவர்ண்மெண்டாரால், பிரசுரம் செய்யப்பட்டுவருகின்றமை, ஜனங்களின் க்ஷேமகாலத்தைக் குறிக்கின்றது.

விநாயகர் பதிகம்:-இது பெரியகுளம் வரந்தரும்விநாயகரைப் பற்றிய பத்து பாடல்கள் அடங்கிய சிறு புத்தகம். இது மதுரை சேதுபதி ஹைஸ்கூல் உபாத்தியாயரான பிரஹ்மஸ்ரீ எஸ். சாமிநாத அய்யரால் இயற்றப்பெற்றது. ஷை விநாயகர் ஆலயம் பழமையானது. பூஜை முதலியவை இன்றி அருபத்தை அடைந்திருந்தது. நாகூர் வ. வெங்கிட்டராமய்யர் அவர்கள் இந்த ஆலயத்தைச் சீர்ப்படுத்தி பூஜைகள் ஏற்படுத்தியும், அதன் நிர்வாகத்திற்குப் போதுமான திரவியம் தேடிவைக்கவேண்டுமென்று பெருமுயற்சி செய்துகொண்டுவருகிறார்கள். அவர்களின் வேண்டுகோளின் மேல் இப்புத்தகம் எழுதப்பெற்று, சைவ அபிமானிகளுக்கு இனாமாக அனுப்பப்பட்டுவருகிறது. இப்பாடல்கள் நூதனமான கற்பனைகளுடன் அழகாய் அமைந்துள்ளன. இவ்வாலய தர்மத்திற்கு நம்மவர் அவரவரால் இயன்ற உதவி புரிவாரென நம்புகிறோம்.

## பத்திரிகை வரவு.

நெட்டால் நாட்டிற்குக் கூலிகளாகச்செல்ல விரும்பும் இந்தியர்களுக்கு ஓர் எச்சரிக்கை என்ற ஓர் பத்திரிகை, மகா-ா-ா-ஸ்ரீ G. A. நடேச அய்யரவர்களால் எழுதப்பெற்று நம் தேசத்தில் பரவுகின்றது. இப்பத்திரிகையில் பிரஸ்தாபித்துள்ள விஷயங்கள் கல்மனத்தையும் உருக்கும். இதிற்

கண்டவிஷயங்களை நம் ஏழை ஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டுவது மிகவும் அவசியமானது. வீணான ஆசைவார்த்தைகளை நம்பி நம்மவர்கள் மோசம் போகாமல் இருக்கவேண்டும் என்பதே இதன் கோரிக்கை.

**பாண்டியம்**—1. இது செந்தமிழ்ப் பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ திருநாராயண அய்யங்காரவர்கள் நிர்மாணஞ்செய்திருக்கிறலிபியைப்பற்றியஒருவியாசம். இப்போதுநம்தேசமாகியபாரதகண்டத்தில் பலபாஷைகளும்,அவைகளின் வரிவடிவுகளாகிய பல வேறு வேறான லிபிகளும் (எழுத்துக்களும்) நடைபெறுகின்றன. இத்தகைய வேற்றுமைகள், நம்தேசத்தார் ஒருமைப்படுதலுக்கும், அந்நியோந்நியம் பெறுதலுக்கும் பெருந்தடைகளாக இருக்கின்றன. பாஷைக்கு ஒலிவடிவுதான் முக்கியமானது, அதுவே உயிர்ஸ்தானமாம். வரிவடிவு கௌணமானது, அதுஉடல் ஸ்தானமாம். ஒலிவடிவுகள் பலவாறாயிருப்பினும், பலவரி (எழுத்து) வடிவுகளைத் தவிர்த்து, ஒரே வரிவடிவு ஒரே லிபி நம் தேசமெங்கும் ஏற்படுமானால்பல பாஷைகளின் பலவாறான எழுத்துக்களைக்கற்பதில் உண்டாகும் வீண்கால விரயம் வீண்ஊக்க விரயம் வீண்செயல் விரயம் முதலியவைகுறையும். மேலும், ஒருநாட்டார் மற்றைய நாட்டாரின் பாஷையைஅறிந்துகொள்ளுதல் இலகுவாகும். இத்தன்மையான லிபி அமையவேண்டுமென நம் தேசத்திலுள்ள பல அறிஞர் பலவிதமாக சில வருஷங்களாக முயன்று வருகின்றார்கள். இதற்கென்றே **ஏகலிபிவிஸ்தாரபரிஷத்**என்ற ஒரு ஸமாஜம் **கல்கத்தா**வில்ஏற்பட்டும், அச்சமாஜத்தார்கள் பல இடம் சென்று அதன்நோக்கங்களை வெளியிட்டு பரவச்செய்தும் வருகின்றார்கள். **தேவநாகரி** லிபியில்வேண்டும் பல மாற்றங்களை ஏற்படுத்தி, அதை நம் தேசமுழுமையும் நடைபெறத்தக்க ஒரு லிபியாகச்செய்தல் கூடுமென்று, வடஇந்தியா, மேல், கீழ் இந்தியா நாடுகளிலுமுள்ள சில புத்திமான்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். **ரோமன்லிபி**யைஅதாவது **ஆங்கில** பாஷை நடைபெறும் லிபியை அவ்விதம் அமைத்துக்கொள்ளுதல் இலகுவாயும், முன்னதைவிட உலகத்தாருக்கு அதிகப்பிரயோஜனமுள்ளதாகவும் முடியும் என்று வடமேற்கு இந்தியாவிலுள்ள புத்திமான்களும் சில ஆங்கிலர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். இதைப்பற்றி சென்ற எப்பிரல் மாசத்தின் இந்தியன் ரிவியூ (The Indian Review) பத்திரிகையில் போதுமான காரணங்களுடனே விஸ்தாரமான ஒரு வியாசம் வெளிவந்தது.

2. பிரகிருதத்தில், நம்முடைய தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மகா-௱-௱-ஸ்ரீ பாண்டித்துரைத்தேவர் அவர்களின் ஆதரவுடனே ஷை சங்கத்தின் மானேஜர் மகா-௱-௱-ஸ்ரீ திருநாராயண அய்யங்கார் அவர்கள் **பாண்டியம்** என்ற நாமகரணமுள்ள ஒரு லிபியை நூதனமாக நிர்மாணம்

செய்துள்ளார். இந்த லிபியை எழுதலும் கற்றலும் மிகவும் சுலபமானது தான். இதன் நிர்மாணம் மிகவும் புத்திசாலித்தனமாக இருக்கிறது. ஒலிவடிவுகளுக்கு வேண்டியபடி வரிவடிவுகள் அமைந்திருக்கின்றன. நூற்றுக்கணக்காயுள்ள லிபிகளின் கூட்டத்திற்கு இது ஒரு புது வரவு. புதிதாய் ஒரு பாஷை ஏற்படவேண்டுமாயின், இதை அனுஷ்டித்தல் வகுவாக முடியும்.

3. ஆனால் ஏற்கனவே அனேகலிபிகள் நெடுநாளாய் நடைபெற்றுக்கொண்டிருக்கிற தேசத்தில், எங்கும் வழங்காத நூதன லிபியை அனுஷ்டானத்திற்குக்கொண்டுவருதல் சாத்தியமானதாகத் தோன்றவில்லை. இந்த லிபியை நிர்மாணம் செய்திருக்கிறவர்கள் இராஜாங்கத்தின் பேர் உதவியையும் செல்வாக்கையும் தீர்க்கமாகப் பெறுவார்களாகில், இந்த லிபி பரவுதலுக்கும் அனுஷ்டானத்தில் வருதலுக்கும் கூடும். இன்றேல், முடியாத காரியமெனத் தோன்றுகிறது. இத்தன்மையான விஷயத்தில் பாடுபடுதலைக் காட்டிலும் ஏற்கனவே உள்ள லிபிகளில், கூடியவரை பெரும்பாலரும் அனேக பாஷைகளும் அங்கீகரிக்கக்கூடிய லிபியை, தெரிந்தெடுத்துக் கொண்டு, அந்தந்த பாஷைக்கு வேண்டுவனவாகிய சிற்சில மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வதில் முயற்சி நிகழுமாகில், மிகவும் பயன்படும். இப்போது, நம்மறிஞர்களுக்குள் கக்ஷி எல்லாம் தேவநாகரி லிபிக்கும் ரோமன்லிபிக்கும் சம்பந்தமாகத்தான் நடைபெறுகின்றது. ஒருசாரார் முன்னது நலம்தரும் என்கிறார்கள். மற்றொரு சாரார் பின்னது அதிக நலம்தரும் என்றும், பின்னதினால் இந்தியா தேசமும் உலகமெல்லாமும் பயன்பெறுமென்றும் சொல்லுகின்றார்கள். நம் தமிழ்ச்சங்கம் இவ்விஷயங்களை ஆலோசித்து, ஒரு லிபியைக் குறிப்பிட்டு, அதன் சார்பில் முயற்சியைச் செலுத்தல் நலமாம். அவ்விதம் பிரார்த்திக்கின்றோம்.

**இயற்கை அற்புதங்கள்:**—இஃது, மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் முதல் உதவி போதகரான மகா-ள-ள-ஸ்ரீ ஆ. வி. கஸ்தூரிரங்கய்யர் அவர்கள் பி. ஏ. செய்தது. ஈசுவர சிருஷ்டியில் அனேக அற்புதங்களை பார்க்கின்றோம். ஆனால் அவைகளின் உண்மைகளை அறிகின்றோம் இல்லை. அவ்வுண்மைகளை வெளியிடும் நூல்கள் நம்முடைய பாஷையில் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் அவைகளைப்பற்றி ஆங்கிலத்தில், ஏராளமான நூல்கள் இருக்கின்றன. அவ்வற்புதங்களின் சில இப்புத்தகத்தில் எளிய தமிழ் நடையில் யாவருக்கும் பயன்படும்படியாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படிக்கின்றவர்கள் வெளிப்பிரபஞ்சத்தைப் பார்க்கும்பொழுது அறிவுடனே பார்ப்பார்கள். நம்மவர்கள் இத்தன்மையான புத்தகங்களை அதிகமாகப் படித்தல் வேண்டும். அப்படிசெய்துவருவார்களா

யில், பிரபஞ்சதத்துவங்களையும், இயற்கைப் பொருள்களின் சக்திகளையும் அறிவார்கள், அதனால் மேன்மை அடைதலுக்கும் இடமுண்டாம். இது மயிலாப்பூர் ஜனரல் ஸப்லைஸ் கம்பெனியாருடைய பிரசுரமாகையால், அப்பதிப்பின் அழகைப்பற்றி அதிகமாகச்சொல்லவேண்டுவதில்லை. விஷயங்களைத் தெளிவுப்படுத்தற்காக ஆங்காங்கு சித்திரப்படங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இதன் அருமையை உத்தேசிக்க இதன் விலை அணு 8 மிகவும் குறைவானது.

**ஆரிய மத உபாக்யானம் முதல் பாகம்.**—இஃது மகா-ா-ா-ஸ்ரீ எ. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் இயற்றியது. இது சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும், ஆரிய தர்மமுறைகளையும் நீதிமுறைகளையும் கதைகள் மூலமாய்க் கற்பிக்கும் உபயோகமான புத்தகம். இப்போது நான்காம் பதிப்பாக ஏற்பட்டிருப்பதினாலேயே நம்மவர்கள் இதை ஆதரிக்கிறார்களென வெளியாகிறது. இதுவும், மயிலாப்பூர் ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாருடைய பிரசுரம். இதன்விலை அணு 4 தான். இரண்டாம் பாகம் சீக்கிரம்வெளிவருமென நம்புகிறோம்.

பத்திராதிபர்.

## சமாசாரம்.

---

தென்னாற்காடு ஜில்லா கல்லக்குரிச்சியில் இப்பொழுது ஒரு பிரஹ்ம ஞானகிளைச்சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது கோமுகி நதிக்கரையில் ஆரம்பிக்கப்பட்டபடியால் இதற்கு கோமுகி லாட்ஜ் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**கம்போடியா பருத்தி:** சாகுபடியில் கவனம்உள்ளோர் நெல்லிக்குப்பத்துக்கு அடுத்த பாலூர் விவசாயப்பண்ணையில் நேர்த்தியாய் வளர்ந்து இருக்கும் கம்போடியா பருத்தியை இப்பொழுதுபோய்ப்பார்வையிடலாம். பருத்திக்காய்கள் வெடித்து பருத்தி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். நேரில் போய்ப்பார்ப்பவர்களுக்கு கம்போடியா பருத்தி சாகுபடியைக் குறித்து வேண்டிய விஷயங்களை பண்ணை மானேஜர் தெரிவிப்பார்.

**ஸ்ரீ சங்கரஜயந்திதினம்:**-மதுரை தர்ம சாஸ்திர சபையில் நாளிது மீ 3வ புதன்கிழமை ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் ஜயந்தி மிகவும்சிரத்தையுடன் கொண்டாடப்பெற்றது. காலை 7–30மணி முதல் 9–30 வரை, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோவிலிலுள்ள தக்ஷிணாமூர்த்தி விக்கிரகத்துக்கு அபிஷேகம் நிவேதனம் பின்பு, உபநிஷத் பாராயணமும் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திர

கானமும் நடைபெற்றன. மாலை 5–30 மணிமுதல் 8மணிவரை ஷை சபையின் மண்டபத்தில், தைத்திரிய உபநிஷத்தை 48 பிராமணர்கள் கானம் செய்தார்கள். பின்பு, ஸ்ரீமத் ஆசாரியார் செய்த, தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தின் கானமும் நமஸ்காரங்களும் நடந்தன. மந்திரபிரஸ்னவகுப்பு, ஆகமவகுப்பு, வித்தியார்த்திகளுக்கும் அவ்வகுப்புக்களை நடத்துகிற உபாத்தியாயர் அவர்களுக்கும், சம்பாவனைகள் அளிக்கப்பட்டன. மகா-ா-ா-ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள், ஆசாரியார் அவர்களின் மகிமையைப்பற்றி உபந்நியாசம் செய்தார்கள். பழம், சந்தனம், தாம்பூலம் விநியோகிக்கப்பட்டன. எல்லாம் நன்றாய் நடந்தன.

**மீன்களுக்கு வைத்தியசாலை**:-அமெரிக்கா தேசத்தில், நூயார்க்கு(New-York) பட்டணத்தில் மீன்களுக்கு வைத்தியசாலை ஒன்று நூதனமாக பிரதிஷ்டை செய்யப்பெற்றிருக்கிறது. கால்நடை, யானை, குதிரை, நாய் இவைகளுக்கு வைத்தியசாலைகள் ஏற்பட்டு நெடுநாளாக உலகத்தில் நடத்தப்பெற்று வருகின்றனவே. அவ்விதமே ஜீவகாருண்ணியத்தை மீன்களுக்கும் கைங்கரியத்தால் வெளிப்படையாக நடத்திவருதல் நலமே, மனிதனைப்போலவே, மீன்களும் பலவியாதிகளுக்கு உட்பட்டு வருந்துகின்றன எனத் தெரியவருகிறது.

சென்றமீ 22-ம் தேதியில், மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் இங்கிலாந்துக்குப் பம்பாய் நகரில் கப்பல் ஏறினார்கள். ஸ்ரீமாந் கிருஷ்ணமூர்த்தி என்பாரும் கூடப்போகின்றார்.

**கூடலூரில் நடந்த பிரஹ்மஞான சபை**:—

1. சென்ற எப்பிரல்மீ 15, 16உகளில் தமிழ், மலையாளம் இலாகாக்களில் உள்ள பிரஹ்மஞான கிளைச்சபைகளின் பெரிய கூட்டம், கூடலூர் பழைய பட்டணத்திற்கூடிற்று. சுமார் 400 வரை ஷை பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்களும், 500 வரை இதரஜனங்களும் கூடினார்கள். மங்களகரமான பந்தலில் சபையின் காரியங்கள் நடைபெற்றன. பிரஹ்மஸ்ரீ ராவ் சாயபு, எஸ். வைத்தினாத அய்யர் பி. ஏ. அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள்.

2. முதலில் கூடலூர் கிளைச்சபையின் நல்வரவுப்பத்திரம் படிக்கப்பட்டது. பின்பு அக்கிராஸநாதிபதியின் விஸ்தாரமான உபந்நியாசம் நிகழ்ந்தது. இக்காலத்தில் சிலர்பொறுமையாலும் ஈரிஷையாலும் பிரஹ்மஞான சங்கத்தைப்பற்றித் துஷணை மொழிகளை பிரஸ்தாபித்துவருகின்றது ந்யாயமல்லவென்றும், அது நம்தேசத்துக்குக்குறைவைப்பயக்குமென்றும், அச்சங்கத்தால் நம்தேசத்திற்கு இதுகாறும் விளைந்திருக்கும் நன்மைகளை விஸ்தாரமாகவும் சொல்லிமுடித்தார்கள்.

3. சென்னையிலிருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ Sir. S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், **வெள்ளியம்பலம்** என்று சொல்லப்படும் ஞானக்குருக்களின் சபையின் வரலாற்றைப்பற்றிய உபந்நியாசத்தைப்படிக்கும்படியாக அனுப்பி இருந்தார்கள். அது படிக்கப்பட்டது, அதில் சில புதிய உண்மைகள் வெளியிடப்பட்டிருந்தன. அவைகளைப்பின்பு ஒரு பத்திரிகையில் பிரசித்தம் செய்வோம்.

4. மகா-ா-ா-ஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணிய அய்யர் அவர்களும், அ. அரங்கசாமி அய்யர் அவர்களும் உபந்நியாசங்கள் செய்தார்கள். அவைகளில் பிரஹ்மஞான சபையைப்பற்றித்தூஷணை செய்பவர்பால், நாம் ஒழுகவேண்டிய முறையைப்பற்றி விஸ்தாரமாகப்பிரஸ்தாபம் நிகழ்ந்தது.

5. பிரஹ்மஞான சபையின் அங்கத்தினருக்குமாத்திரம், மகா-ா-ா ஸ்ரீ டி. இராமச்சந்திரராயர் அவர்கள் ஆங்கிலத்தில் உபந்நியாசம் செய்தார்கள்.

6. செங்கல்பட்டு கிளைச்சபையின்மெம்பரான பிரஹ்மஸ்ரீ C. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் "கர்மம், கர்மமூலம், கர்மபிரிவு, கர்மகதி" இவைகளைப்பற்றித் தெளிவாய் உபந்நியாசம் செய்தார்கள்.

7. திருவனந்தபுரம் மகா-ா-ா-ஸ்ரீ K. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள், ஸ்ரீராம அவதாரத்தின் மஹிமையைப்பற்றி விஸ்தாரமான ஒரு உபந்நியாசம் ஆங்கிலத்தில் படித்தார்கள்.

8. மதுரை பிரஹ்ம ஸ்ரீ. ப. நாராயண அய்யர் அவர்கள் "பிரஹ்மஞானசங்கம் உலகஅபிவிர்த்தி முறையில் ஒருமுக்கிய சாதனமாகஇருக்கிறது" என்பதைப்பற்றி விஸ்தாரமான உபந்நியாசம் தமிழில் செய்தார்கள்.

9. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்து சுவாமிகள் "ஆத்மா" என்பதைப்பற்றி வெகு அழகாய், உபநிஷத் முதலிய ஆதாரங்களுடனே, கேட்போர் மனம் குளிரவும் ஞான அமுதை அடையவும், சுமார் ஒன்றரை மணிநேரம், இனிய தமிழ் வாசகத்தில் உபந்நியசித்தார்கள். இச்சபையில் எல்லா உபந்நியாசங்களும் சிலாக்கியமானவைகளாக இருப்பினும், இந்த வீரசைவ மடாலயத்து ஸ்வாமிகள் செய்தபிரசங்கம்நனிஉயர்நலம்அமைந்துள்ளதாகயிருந்தது. மற்ற மடாதிபதிகள் இவர்கள் போல குணசீலராகவும் கல்வி கேள்விகளால்நிறைந்தவராகவும், பிறருக்குப்போதிக்கவேண்டுமென்ற அவாவும் உடையராகில், நம்தேசம் நலம்பெறும். நம்முடைய **சநாதநதர்மம்** என்ற ஆரியமதம் மேன்மை பெறும்.

10. பிரஹ்மஞானசபையின் யந்திரத்தின் உண்மையைப்பற்றி மகா-ா-ா-ஸ்ரீ மான்சேரி எஸ். ராமய்யரவர்கள் உல்லாசமாக பிரசங்கித்தார்கள்.

11. நாகர்கோவில் டிஸ்ரிகட்டு முன்சிபு மகா-ா-ா-ஸ்ரீ கல்யாணரா மய்யரவர்கள் நம்மவர் ஞானப்பழக்கமுறைகளைப் பற்றி நேர்த்தியாய் ஸ்ரீமத் பாகவதத்தினின்று சில சுலோகங்களை மேற்கோளாகக்கொண்டு பிரசங்கம் செய்தார்கள்.

12. பொதுவாய், பிரஹ்மஞானசபையின் பிரயோஜனத்தைப் பற்றி ஸ்ரீமாந் வி. ராமச்சந்திர நாயக்கரவர்களும், பெரியகுளம் பிரஹ்ம ஸ்ரீ. சுந்தரராஜ அய்யர் அவர்களும் விரிவான உபன்னியாசம் செய்தார்கள். கோயம்புத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். எந். ராமசுவாமி அய்யர் அவர்கள் பிரஹ்மஞானத்திற்கும் மதங்களுக்குமுள்ள தாரதம்மியத்தைப்பற்றி, செவ்வையாக பிரஸங்கித்தார்கள்.

14. பிரஹ்மஸ்ரீ. சீதாராம சாஸ்திரிகள், சபையின் அங்கத்தினருக்கு மாத்திரம், தமிழில், பிரஹ்மஞானிகளின் உத்தரவாதங்களைப்பற்றி பிரசங்கித்தார்கள்.

15. கல்விமுறையில் நாம் இனி கவனிக்கவேண்டிய உத்தரவாதங்களைப்பற்றி மதுரை மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமச்சந்திரஅய்யர் அவர்கள் விசாலமாய் உபந்நியசித்தார்கள்.

16. 'மௌனத்தின் சக்தி' என்பதைப்பற்றி, மகா-ா-ா-ஸ்ரீ T. S. லெக்ஷ்மிநாராயண அய்யர் அவர்கள் உபந்நியாசம் செய்தார்கள்.

17. அக்கிராஸனாதிபதி அவர்களின் முடிவான உபந்நியாசம் நடந்தது. பின்பு, வீரசைவ மடாலயத்து ஸ்வாமிகள், பிரஹ்மஞானசபையினால் உலகத்திற்கும் முக்கியமாக இத்தேசத்திற்கு உண்டாயிருக்கும் நன்மைகளைப் பற்றியும் ஸ்ரீமாந் கர்னல் ஆல்காட்டு என்பாரையும், மாதுஸ்ரீ. பிளவாட்ஸ்கி அம்மையாரையும் மாதுஸ்ரீ. பெஸண்டு அம்மையாரையும் பற்றி விஸ்தாரமாக, எல்லாரும் சந்தோஷிக்கும்படியாக உபந்நியாசம்செய்தார்கள். எல்லாம் சுபமாயும் மங்களகரமாயும் நடந்தது. கூடலூர் கிளைச்சபையார், யாதொரு குறைவின்றி அதிதிபூஜை என்ற விருந்தோம்பல் தர்மத்தை நடத்தினார்கள். எல்லாம்வல்ல கடவுளின் அருட் பிரஸாதம் பூர்ணமாக இருந்தது.

பத்திராதிபர்.

**வெண்தாமரைநாள்:**—மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில், நாளிது ஸ்ரீ 8உ சாயங்காலம் 3 மணிமுதல் 8-30 வரை, வெண்தாமரைநாள் மிகவும் சிரத்தையுடனே கொண்டாடப்பெற்றது. சாயங்காலம் 3மணிமுதல் 5-30 மணிவரை சுமார் 400 ஏழைகளுக்கு திருப்தியாக அன்னம் அளிக்கப்பட்டது. 6-30 முதல் 7-30 வரையில், **தைத்திரிய உபநிஷத்தும்,** தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரமும் 12 பிராமணர்கள் வெகு அழகாய் கானம்செய்தார்கள். மாது ஸ்ரீ ஹெலிநாம்பாள் அம்மையார் 1891ஹூ மேஸ்ரீ 8உயில் ஸ்தூல சரீரத்தைவிட்டு நீங்கினார்கள். அவர்கள் போகுங்காலத்தில், ஏழைகளுக்கு அன்னம் கொடுக்கும்படிக்கும், பகவத்கீதையினின்று சில சுலோகங்களையும், கவுதமபுத்தரைப்பற்றியுள்ள 'The Light of Asia' என்னும் புத்தகத்தினின்று சிலபாகத்தையும் தம்முடைய ஞாபகச்சின்னமாக இத்தினத்தில் தம்முடைய சிஷ்யர்கள் படித்தல்வேண்டுமென ஆஞ்ஞாபித்தார்கள். அந்த அம்மையாரின் வேண்டுகோளின்படி, உலகத்திலுள்ள பிரஹ்மஞான க்கிளைச்சபைகள்தோறும் மேற்கண்டவிதமாக இந்நாள்கொண்டாடப்படும். இவ்வருஷம் மதுரைசபையில் கீதையின் 16-ம் அத்தியாயமும் (தெய்வ அசுர. சம்பத்தைப் பற்றியது) கவுதமபுத்தரைப்பற்றிய The Light of Asia என்னும் புத்தகத்தினின்று ஒரு பாகமும் படிக்கப்பட்டன. எல்லாம் நேர்மையாகவும் திருப்தியாகவும் இறைவன் அருளால் நடைபெற்றன. ஷசபை சம்பந்தமான துண்டுப் பத்திரிகைகள் இனாமாக விநியோகிக்கப்பெற்றன.

• • • • • •

வேதாரிண்ணியத்தில், நாளிது ஸ்ரீ 20, 21உயில் தஞ்சாவூர் பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபைகூடும். அநேகபுத்திமான்கள் வருவார்கள். ஞானஅமுதூட்டும் பல பிரஸங்கங்கள் நடைபெறும்.

---

## பூர்ணசந்திரோதய விளம்பரம்.

---

### சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ. இரண்டுதான்.
தனிப்பிரதி விலை அணா 4.

### விளம்பர விகிதம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 மாசம் | 4—0—0 | அரைபக்கம் | 1 மாசம் | 2—8—0 |
| ,, | 3 ,, | 10—0—0 | ,, | 3 ,, | 7—0—0 |
| ,, | 6 ,, | 20—0—0 | ,, | 6 ,, | 12—0—0 |
| ,, | 1 வருஷம் | 36—0—0 | ,, | 1 வருஷம் | 18—0—0 |

ப. நாராயண அய்யர்,
பத்திராதிபரும் மானேஜரும்.

## புஸ்தகம் துண்டு பத்திரிகைகள், விளம்பரம்.

---

| | |
|---|---|
| பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| அவதாரங்களின் உண்மை | 0-8-0 |
| ஏசுகிறிஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| அன்பு, அதன் உண்மை | 0-0-6 |
| சுகிர்தம்பயக்கும் வாழ்நாள்முறை | 0-0-3 |
| மடங்கள், மடாதிபதிகள் | 0-1-0 |
| நவராத்திரி அல்லது மஹிஷாஸுரமர்தநம் | 0-0-3 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மஞான சபை | 0-0-1 |
| ஷை யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| ஷை ஆங்கிலத்தில் | 0-0-3 |
| நாமிருக்கும் வீடு | 0-0-6 |
| அஷ்டமிபிரதக்ஷணம் | 0-0-1 |
| ஏசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ in Tamil. | 1-0-0 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 20 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,
பிரசிடெண்டு, பிரஹ்மஞான சபை, மதுரை.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

## ஸ்ரீ காசி.

பட்டு பீதாம்பர காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ளமாலெ 1-க்கு 6அணா முதல் ரூபா 12-வரை. விலெ அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலெ அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாததைத்திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும்.

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 முழம் | 1க்கு ரூபா | 0 14 0 | 9 முழம் | 1க்கு ரூபா | 2 0 0 |
| 6 | ஷை | 1 4 0 | 10 | ஷை | 2 8 0 |
| 7 | ஷை | 1 8 0 | 12 | ஷை | 3 8 0 |
| 8 | ஷை | 1 12 0 | 15 | ஷை | 4 8 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸானம், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6முழம் நீளம் 3 முழ அகலம். செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | |
|---|---|---|---|
| முதல் கெம்பர் 100-க்கு | ... | ... | 3 0 0 |
| 2-வது கெம்பர் 100-க்கு | ... | ... | 2 8 0 |
| 3-வது கெம்பர் 100-க்கு | ... | ... | 0 6 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடியபித்தளெ வெண்கலத்தால்செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடக்கிய அழகும் நேர்த்தியும் நைசும் புஸபளப்புறுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, **Benares City**.